குவேண்டும் உதவிகளைச் செய்யத்தொடர்ந் திருக்கின்ற மகாவிஷ்ணு முதலாகிய தேவர்களைச் சின்ன பின்னப்பட வாட்டி இக்காலத்தில் நமக்கு நேர்ந்திருக்கின்ற கோபக்கனலைத் தணிப்போமென்று தன்கிளைகளுடன் நாசப்படவிருக்கின்ற சூரன் பேசிய வாசகங்களனைத்தையும் குமாரசுவாமியார் தம் திருச்செவிகளி லேற்று நகைத்தவராய்க் கொடிய செய்கைகளை நடத்திவரும் கயவனே! நீ வியர்த்தமாகிய வாக்கியங்களை ஆடினை. உன்கருத்தின் வண்ணம் முடிவதொன்றேனுமில்லை. ஆதலால் வயிரமலைக் கொப்பாகிய உன்மார்பைத் துளைக்கும்படிக்கு நாம் செலுத்த விருக்கின்ற கூரிய அலகைப்படைத்த பாணகோடிகளானவை உன் அகந்தையை அடக்கி மறுமொழி சொல்லுமென்று நிர்மலக்கடவுளாகிய சிவகுமாரன் திருவாய் மலர்ந்த வாக்கியங்களைக் கேட்டமாத்திரத்தில் அவுணர்பெருமானுக்கு அதிகக்கோபம் பிரவேசித்து வடவையைப் போலச் சீறி நல்லகாரியம் உன் விருப்பை இந்த நிமிஷத்தி லடக்குகிறேனென்று தங்கக்கட்டுகள் பூண்ட மேருவை யொத்தவில்லை யெடுத்து நிறுத்தி நாரியைமாட்டிக் குமுகுமெனக் குணத்தொனி யெழுப்பிய தருணத்தில் அச்செய்கையைக்கண்டு பூதவீரர்களனைவரும் பாற்கடலிலெழுந்த விஷத்தைவளைந்து கொண்ட தேவர்களைப்போலச் சூரனைச் சூழ்ந்து கொண்டார்கள், இவ்விதமாகச் சிவகணங்களும் அவர்கள் தலைவரும் மேலிட்டு வீராவேசங்களுடன் தமது விற்களை வளைத்துக் கடூரமாகிய பாணகோடிகளைச் சோனை மாரிபோற் சொரிந்து தண்டாயுதங்கள் வேலாயுதங்கள் சக்கரப்படைகள் மராமரங்கள் பருத்தமலைகள் இவைகளினாலும் சாடி அவர்களாற் கூடியவரையில் அகோரயுத்தங்களைச் செய்து வருவதைச்சூரமகாராஜன் கண்டு நகைத்தவனாய்ச் சாங்கோபசங்கக் கணக்கிலும் மேலிட்ட சரவருஷங்களைப் பெருக்கித்தன்னை மூடவருகின்ற பகைவர்படைகளை நிமைப்போதிற் கண்டித்தழித்து மேலும் அமோகமாகிய கணைகளைச் சந்தித்துவிட்டுப் பூதப்படைகளைக் கண்டங்கண்டமாகச் சித்திரவதைசெய்து நிர்மூலப்படுத்திய காலத்திற் பூதசயினியங்கள் காணமற்பறந்தோடின. அதைக்கண்ட தேவரானவர் மேலிட்டுவந்து தமது அமோகமாகிய பாணவிதங்களைச் செலுத்திச் சூரனைக்காணக்கூடாமல் மறைத்தனர். அவுணராஜன், நகைமுகனாய் அவைகளை மதியாமற் சும்மாபார்த்திருக்க அப்பாணங்களனைத்தும் அந்த அசுரன் பேரிற்பட்டு மழுங்கித் தெறித்து வீழ்ந்தன. அப்பாற் சூரன்

தன்தேரைச் சக்கிராகாரமாகச் சுழற்றிக்கொண்டு கோடா கோடி சுடு சரங்களை ஒவ்வொரு தொடையில் தூண்டிவிட்டுப் பூதசயினியங் களைச் சின்னபின்னப்பட வாட்டத்தொடங்கிய காலையில் எண்மரும் இலட்சரும் தேகமுற்றினும் உதிரம் பெருகியோடப் பிரமித்து மதிமயங்கி எதிர்த்து நிற்கமாட்டாமல் மானமழிந் தோட்டம் பிடித்தார்கள். வீரவாகுதேவர் அதனைத்தெரிந்து சடுதியில் தமது உடைவாளை உருவிக்கொண்டு சூரன் தேரிற்பாய்ந்து அவன் கரத்தில் விளங்கியிருந்த மகத்தாகியவில்லைத் திடீரென இருதுண்டாக வெட்டிக் கர்ச்சித்தனர். நூற்றெட்டு யுகம்வரையில் யாவராலும் அசைக்கக்கூடாமற் பலவெற்றிகளைப் பெற்றிருந்த சூரனுடையதனுசை ஒருநிமைப்போதில் வெட்டியெறிந்த நமது தேவருடைய சௌரிய பராக்கிரமத்தை யென்னவெடுத்துச் சொல்லுவோம்! தனது ஒப்பற்ற வில்முறிந்ததினாற் சூரனுக்குண்டான மகாக்கோபத்தில் அவன் தன் கரத்தையோங்கி வீராதிவீரன் மார்பில் அறைந்தனன். உடனே தேவர் மார்பானதுபத் தலாய்ப் பிளந்து இரத்தம் பீறிட்டோடக் களைத்து இரதத்தட்டியில் விழுந்து விட்டனர். சூரன் அவரை யெடுத்து வானத்திற் சுழற்றி வீசினன். அவர் அண்டப் பித்திகைவரையிற் போய் மீளும்போது வாயுவின் பரிசத்தாற் களை தெளிந்து நிலத்திற்குச் சமீபத்தில் வந்தகாலையிற் பாய்ந்துபோய்ப் பாலசுப்பிரமணியர் பக்கலில்வந்து சோர்வுடன் நிற்பதாயினர். சூரன் வேறுவில்லைக் கரத்திற்கொண்டு விளங்கினன்.

அதனைக்கண்ட எமதிறைவனாகிய சிவசுப்பிரமணியக் கடவுள் வீரகாளியும் திடுக்கிடும்படிக்கான விற்குணத் தொனிசெய்து முற்பட்டுவரும் காலையிற் காலாந்தகனை யொத்த சூரன் கோபித்துக் கைமிஞ்சி இருபத்து நூறாயிரம் கணைகளைப் பிரயோகித்து அவைகள் ஒன்றனந்தமாகப் பூமண்டல முற்றும் பரவிச்சாடும் அனர்த்தங்களைத்தேவர்கள் கண்டு நடுங்கியிருக்கும்போது குமாரதேவரானவர் தமது தனுவினிடத்தில் அமோகமாகிய வாளிகளைத் தொடுத்துப் பிரயோகித்துப் பாதகன் எங்கும் நிறைத்த சரப்பெருக்கனைத்தையும் ஒன்றொழியாமற் கண்டித் தெற்றினர். இவைகளைப் பார்த்த சூரன் வயிரங்களைப் பேசிப் பாலன் வீறுப்பை அடக்குகிறேனென்று எமதிறைவனிடம் நெருங்கிச் சரவருஷங்களைத் தூண்டிக் கர்ச்சித்தனன். குமாரதேவர் அவைகளைக் கண்டித்து நிலத்தில் வீழ்த்தினர். இவ்விதங்

களாக இருவீரர்களும் பின் வாங்காமற்கொடிய போர்த்தொழிலை நடா
த்திவரும் அற்புதக்காட்சியைக் கண்டிருந்த தேவர்கள் முதலியோர்
திகைத்து அம்மம்ம! இவ்வீரர்களுடைய பராக்கிரமமே பராக்கிரமம்.
இவர்கள் தேர்கள் போகுமிடங்களை யறியக்கூடவில்லை யென்று புக
ழ்ந்திருந்தார்கள். அது சமயத்திற் சூரன் கைமிஞ்சி முருகன் தேரில்
நாட்டியிருத்த வெற்றித் துவசத்தை மிக்கவொலியெழ வெட்டித் தள்
ளித் தக்ஷணத்திற் சங்கோபசங்கமாகக் கணைகளைச் சொரிந்து முருக
ப்பெருமாளின் தோற்றந்தெரியாமற் சகலரும் பிரமிக்க மூடிக்கொக்
கரித்து வெற்றிச்சங்கத்தையெடுத்துப் "பம்பம்" என்று அண்டமதிர
ஊதிமுழக்கினன். அப்போது வடிவேலருக்குச் சற்று கோபம் பிர
வேசித்துப்பகைவன் தம்மை மூடியகணைகளை நிமையிற்பேக்கிமீட்டும்
ஏழு கோடி சிலி முகங்களைப்பிரயோகித்துச் சூரனுடைய மகத்தான
தேரைச் சக்கைசக்கையாகப் பேர்த்தெறிந்து அதிற்பூட்டிய புரவிகளை
யும் பாகனுடன் கண்டித்துத் தள்ளினர். இவ்விதம் சூரன் பங்கப்பட்
டதைத் தெரிந்த பூதசேனாதிபதியாகிய பானுகம்பன் சுரிமுகச்சங்கங்க
ளைத்தனது ஆயிரம் வாய்களினிடத்துச் சேர்த்துப் "பம்பம்"
என்று தொனித்தனன். மகாவிஷ்ணுவும் தமது பாஞ்சசன்னியத்தை
முழக்கினர். அப்பால் ஆதிதேவன் தேரின்மீதில் துவசமில்லாமையைக்
கண்டதேவர்கள் வருத்தமுற்று அக்கினி தேவனைப்பார்த்து ஓ! வீரா
திவீரனே! துரிதமாய் எமதிறைவன் இரதத்தின் உச்சியில் வெற்றிக்
கொடியாக நீநின்று அசையவேண்டுமெனக் கேட்டுக்கொள்ள அக்க
னற் கடவுள் பூரிப்புடன் அப்பணிவிடையைச் சிரசாகவகித்துத் தக்ஷ
ணத்தில் அழகிய சிறகையும் சிவந்த கொண்டையையும் படைத்திருக்
கின்ற கோழிக்கொடியின் உருக்கொண்டு தேவதேவோத் தமனுடைய
திருத்தேரினிடையில் நின்றுயர்ந்து தனது நீண்ட கண்டத்தைத்
தூக்கி அண்டங்களதிரச் "சொக்கநாதா" என்னும் பேரோசையெழ
க்கூவினன். அதைக்கண்ட சூரன் தனது சிரத்தையசைத்து மூக்கில்
விரலைவைத்துப் பக்கத்தில் நின்ற வேறுசேமத் தேர்களினொன்றிற் சிங்
கத்தைப்போலத்தாவி மண்டி போட்டிருந்து இதனை யோசிப்பதாயி
னன். இந்தச்சிறுவனுடைய உதவிதேவப்பயல்களுக்கு இத்தலத்தில்
அல்லது விண்ணிடத்திற் கிடையாது. ஆகையால் அவர்கள் கருவ
த்தை இந்த நிமிஷத்தில் அடக்குவேனென்று தன் சாரதியை யெச்சரி
த்து வாயுமண்டலம் மேகமண்டலம் முதலியவற்றைக் காற்றினுங்

கடுகித்தாண்டித் தேவர்களிருக்கின்ற விடத்திற்குப் போய் அவர்கள் பேரிற்சோனை மாரியைப்போல் ஆங்காரித்துச் சரங்களைப் பிரயோகித்து வாட்டுகின்ற அசுரனுடைய சூழ்ச்சியினைச் சிவகுமாரன் தெரிந்தவராய்த் தாம் இரணக்களத்தில் இருந்தபடிக்கே கரவேகமாகச் சரங்களைப் போக்கிப் பாதகனுடைய பாணப்பெருக் கனைத்தையும் நிர்மூலப்படுத்தியவுடன் சண்முகதேவர் வாயுதேவனைக் குறித்துத் தமது தேரைச் சூரன் முன் ஆகாயத்திற்கொண்டு போய் நிறுத்தித் தேவர்கள் பட்ட வருத்தங்களைச் குமாரதேவர்கண்டு இரக்க முற்றுத்தமது திருக்கரத்தை நீட்டி ஓ! தேவர்களே! இனிப்பயங்கொள்ள வேண்டாம்; மனவருத்த மற்றிருக்கக் கடவீர்கள்! பாதகனை இதோ வாட்டுகின்றனமெனத் தேறுதல் சொல்லுவதைச் சூரன் கேட்டு உருத்திராகாரமாய்க்கோபித்து ஒருபாலனோ நம்மைக் கொல்ல வல்லவனென்று உடனே கொடிய சரங்களைப்போக்கிச் சரவணபவனை மூடி "கியாவு" மெனச் சிங்கநாதஞ் செய்தனன். எமதிறைவன் அவைகளை யொருநிமையிற் போக்கினர். பின் ஒருவரோடொருவர் பாணங்களை மேலிட்டிறைத்தும் வீரங்களைப்பேசியும் வெற்றிபெற வேண்டுமென்கிற வீராவேசத்தினாற் சக்கிராகாரமாய் மூதண்டகோளகை முதலிய தலங்களிற் சாரிகை திரிந்து மிகவற்புதமாய்க்கரேமாகிய யுத்தங்களைச் செய்வதானார்கள். மகாதீரனாகிய சூரமகாராஜன் தன் கைவல்லபத்தினாற் சருவசங்கார காலத்தில் ஊழிமேகம்பரவி அக்கினி மழையைப் பொழிந்து உலகங்களை வாட்டுமாறுபோலச் சுயஞ்ஜோதிமயமாகிய நம் கடவுள் மீதிற்கொடிய சரவருஷங்களைப் பொழிந்து மேலும் மத்திமத்தியில் அனந்தகோடி மழுப்படை முத்தலைச்சூலம் கப்பணம் பிண்டிபாலம் கவண் கொழுப்படை வச்சிராயுதம் வேற்படை எழுவாயுத முதலிய ஆயுதங்களையுங் கரவேகமாகத் தூண்டினன். இத்தகைய அவுணராஜன் கற்றிருக்கின்ற விஞ்ஞைகளின் முயற்சிகளையும் விற்சாதுரியங்களையும் கரவேகங்களையும் எவராலும் சொல்லிமுடிவதன்று. அத்தருணத்திற்சிவகுமாரன், சூரன் ஆரோகணித்திருந்த மேருவுக் கொப்பான இரதத்தைப் பொடியாக்கிப் பூட்டிய புரவிகளையும் சாரதியையும் கண்டித்துத் தள்ளினர். சூரன் சிரோரத்தினத்தைப் பறிகொடுத்த நாகம்போல் வாடிக்கரத்திற் பற்றிய வில்லுடன் நிமைப்போதிற் பூதவெள்ளங்கள் தங்கியிருக்குமிடத்தை நோக்கி நிலத்திற் பாய்ந்து தனது அமோக பாணங்களால்

அவைகளை அல்லோலகல்லோலப் படும்படிக்கு வாட்டி நாசஞ்செய்வ
தானான். சிவகுமாரன் பாதகன்செய்கை வெகு நேர்த்தியெனத்
தாமும் கீழேகொடிக்குள் தேரைநடத்தி வந்து சூரன் முன் நிறுத்தி
அசுரன் சரங்களின் கொடுமைகளை மாற்றினார். சூரன் அதிற் கோபி
த்து அனந்தகோடி சுடுசரங்களைக் குமாரதேவர்பேரிற் பிரயோகிப்ப
தானான். எமதையன் அவைகளைப் போக்கிமேலுங் கொடிய சரங்களை
ச்சூரன் புஜங்களுக்கு இலக்காக விட்டபோது, அவைகள் அவுணரா
ஜன் வயிரம்போன்ற தோள்களில் தாக்கித்துகளாய் நாற்றிசையினும்
பறந்தன. அதைக்கண்ட அவுணராஜன் பெருமூச்செறிந்து எவர்களும்
பார்ப்பதற்கு அஞ்சும் நமது தோட்களில் இப்பாலனோ கணைசெலு
த்துவனென்று பற்களைக்கடித்து எமதையன் பேரில் வேகமாய்ப்பாண
ங்களைத் தூண்ட, அவைகள் நெருங்கிப் பகைவன் தோளிற்பட்டவு
டன் சாம்பலாய்த் தகிக்கப்பட்டு வீழ்ந்தன. தக்ஷணத்தில் எமதையன்
சிலகணைகளை இராஜராஜன்பேரிற் செலுத்தினர். அசுரன் அவைகளை
க்கண்டித்து அமோகமாகிய திவ்யவாளிகளைப் பொழிந்து பூதப்படை
களையும் படைத்தலைவர்களையும் மற்ற வீரரையும் நிலைகுலைத்துச் சாடி
க்கொல்வதானான். அச்சூரன் திறத்தைச் சிவகுமாரன் கண்டு துரி
தமாகத் தமது சரங்களால் அவைகளைப் போக்கிச் சூரன்வலியவில்லை
ப்படாலுமென வெட்டித் தள்ளினர். அது நிலத்தில் விழுமுன் சூரன்
வேறுவில்லைக் கரத்திற் கொண்டு கர்ச்சித்து மாயமந்திர முயற்சியி
னாற் சடுதியில் வானத்தில் மறைந்திருந்து பூதர்களைப் பாணகோடிக
ளாற் சாடிவருத்துவதை எமதையன் தெரிந்து துரிதமாய்த்தமது
திருத்தேரை விண்ணகத்திற் செலுத்திக்கொண்டு போய்ப்பகைவன்
மாயப்போரை வாட்டியகாலத்து அசுரன் மாயவித்தையாற் கீழே
யுள்ள போர்க்களத்தில் தோன்றிப் பூதசயினியங்களைச் சாடிக்
கொல்வதானான். சிவகுமாரன் தக்ஷணத்தில் தமது தேருடன் நில
த்திலிறங்கிப் பூதசேனைகளைக் கவிந்து வருத்தும் அசுரன் பாணங்களைக்
கண்டதுண்டப் படுத்தினர். பகைவன் உடனே தன் உருவை மறை
த்துக் கடலின் எல்லையில்தோன்றிச் சரவருஷங்களாற் சிவகணங்கள்
முதலானவர்களைத் திகைக்கும்படி சாடுவதைக் கந்தசுவாமியார் தெரி
ந்து அத்தலத்தை நொடியிற் சேர்ந்து அவன் படைகளை வாட்டினார்.
அவ்வேளையிற் சூரன் ஒரு மாயமந்திரத்தால் தன் உருவத்தை மறை

த்து அண்டகடாக வெல்லையிலும் சேஷனாதிய நாகர்வசிக்கும் பாதலத்திலும் மகம்மேருவின் சிகரங்களிலும் மகா விஷ்ணுவுக்கு இருப்பிடமாகிய வைகுந்தநகரிலும் மாறி மாறிப்போய் அங்குள்ளவர்களையும் தனது கொடிய சரமாரிப் பெருக்காற் சாடும்போது எமதையனும் சலியாமல் அப்பாதகன் சென்ற விடங்களி லெல்லாம் விடாமல் தொடர்ந்து அவன் பாணங்களை அதப்படுத்துவதான மகிமைகளை நாம் இங்கு என்ன எடுத்துப் பேசப்போகின்றோம்! அத்தருணத்திற் சூரன் பெரும்போரைச் செய்து செய்து நிருவகிக்கமாட்டாமற் களைத்துத் தன் உருத்தெரியாமல் மறைந்து அண்டகோளகையின் மேற்புறத்திலிருக்கின்ற வாயிலுக்கு அருகிற் போகும்போது பாலசுப்பிரமணியதேவருக் தொடர்ந்து கொடியபோரைச் செய்து சூரன் இரதத்தைச் சாரதி குதிரைகளுடன் தும்சம்பண்ணித் தள்ளினர். அவுணராஜன் திகைத்து அப்பால் தனது இந்திரஞாலத் தேரை நினைக்கத்தக்ஷணத்தில் அது எதிரில் வந்து நின்றது. அதில் அவன் தாவியேறி முன்னம் சரவணபவன் அவுணச் சயினியங்களை மேலும் வரவொட்டாமல் அண்டவாயிலைச் சரங்களால் அடைத்து வைத்திருந்த வல்லபத்தைக் கண்டுசூரன், குமாரசுவாமியுடன் போரைக்கொடுத்துக்கொண்டிருந்த படிக்கு அந்தவாயிற் சரக்கூடத்தையும் அதம்பண்ணினவனாய் அதின் மேற் . புறத்திற் பெருக்கெடுத்து ஆரவாரித்திருக்கும் தனது நால்வகைச் சேனாசமுத்திரங்களையும் பார்த்துத்தன் கரங்களை நீட்டி வாருங்கள்! வாருங்கள்! என்று புவனங்கள் அதிரும்படிக்குக் கூக்குரலிட்டு அழைத்த காலையில் அச்சேனைப் பெருக்குகள் அண்டவாயிலைக்கடந்து பெருமுழக்கத்துடன் விண்ணிடமெங்கும் மூடிச்சிவகுமாரனைக் கண்டு வளைந்து கொண்டு அகோரமாகிய யுத்தங்களைச் செய்யத் தொடங்கின. அதனைச் சரவணபவன் தெரிந்து பகைவர் அனைவரையும் ஒருமுனையில் ஒடுக்கத் திருவுள்ளத்திலெண்ணிக் கோபப் பார்வையைச் சிறிது தம்மையெதிர்த்து வந்த சேனைக்கூட்டங்களில் நாட்டிய மாத்திரத்தில் எழுந்த சுவாலைக் கனலால், ஆணவத்தால் நல்லுணர்வைப் போக்கி மயங்கியிருக்கும் சூரன் சதுரங்கசேனைப் பெருக்கனைத்தும் பக்கென்றெரிந்து சாம்பலாயின. இவ்வித நாசத்தையடைந்த காலத்தில் மற்றைய அண்டங்களிலிருந்து வெளிவந்த சயினியங்களிற் சில வடவைபோல் ஆரவாரங்களைச் செய்துகொண்டு விண்மண் திசாதிசைகளில் நெருங்கிவந்து

பாலசுப்பிரமணியக் கடவுளைச் சூழ்ந்து கொடிய பாணவிதங்களாலும் மாயைப் பெருக்குகளாலும் கடும்போர் செய்து வருவதனைச் சிவகுமாரன் கண்டு தமது கோபக்கனலால் அவர்களனைவோர்களையும் சாம்பலாக்கி மடித்தனர். பின்னும் மேலே அண்டங்களில் வழி பெறுமல் அடைபட்டிருந்த நால்வகைச் சேனைப் பெருக்கானது கடையுக வெள்ளத்தினும் மேலிட்டு வீறிவந்து குமாரசுவாமியை நெருங்கிச் சீறியெதிர்த்ததனைக் கார்த்திகேயன் கண்டு சகல பகைவரையும் ஒழிப்பதாகத் திருவுள்ளத்தி லெண்ணித் தமது திருக்கரங்களில் விளங்கிக் கொண்டிருக்கும் கைவேல் கணிச்சி சூலம் சக்கரம் தண்டம் இத்தகைய சிறந்த ஆயுதங்களைக்குறித்து நீங்கள் நாற்றிசையினும் விரைவிற்போய்ச் சத்தசாகரங்களும் பெரும்புறக்கடலும் ஒன்றுபட்டுப் பெருகுமாறு போலப்பரந்து சூழ்ந்து வாதாடிவரும் சூரன் சதுரங்க சேனைகளின் விரிவனைத்தையும் துமசப்படவாட்டி, வருவதற்க் கிடம்பெறுமல் மேலே அண்டங்களில் தேக்கிட்டிருக்கின்ற நால்வகைச் சயினிய வெள்ளங்களையும் பற்பல வுருக்கொண்டு வளைந்து சின்ன பின்னப்படச் சாடியபின்பு நம்மிடத்திற்கு வரக்கடவீர்களெனக் கட்டளையிட்டுச் செலுத்தினர். அந்தத்தெய்விகம் பொருந்திய ஆயுதங்கள் அனந்த கோடிவிதங்களில் வெளிப்பட்டு ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் சடுதியில் நுழைந்து நுழைந்து அத்தலங்களில் நெருங்கியிருக்கின்ற இரதகஜ துரகபதாதி வெள்ளங்க ளனைத்தையும் அதாவதப்பட வாட்டிக்கொன்று திரும்பி வானகங்கையிற் படிந்து குமாரதேவருடைய திருக்கரங்களில் வந்து பழயபடிக்குவிளங்கியன. இவ்விதமாகச் சரவணபவன் தூண்டியபடைகளால் தன் சேனைகள் பாக்கியில்லாமல் நாசப்பட்ட வேடிக்கைகளைச் சூரன் கண்டு மண்டியெரிந்து இப்பாலனைக் கணப்போதிற் கொல்லக்கடவே னென்று தனக்குச் சிவபிரான் அருளிய சக்கரப்படையை முருகேசன்பேரில் வேகமாய்ச் செலுத்தினன். குமாரசுவாமியார் தமது திருக்கரங்களி லொன்றை நீட்டிவட்டாகாரமாய்ச் சூரியனுக்கொப்பாகச் சொலித்திருக்கும் சக்கரத்தை வா! வா! வென்றழைத்துப் பற்றி நகைமுகராயிருந்தனர். இப்படிக்குத் தனது அருமைச்சக்கரம் முருகேசன் வசப்பட்டதைச் சூரன் கண்டு திகைத்து இக்தப்பாலனை மாயையால் வெல்வேனென்று பற்பல வுருக்களைக் கொண்டு எங்குந்தானக நின்று கொடிய பாணப்பெருக்குகளைச் சொரிந்து சுழன்றுசுழன்று பிரபலச்

சண்டை செய்வதினைக் குமாரதேவர் தெரிந்து தமது ஞானப்படையை விட்டுப் பகைவன் மாயைத்திறங்க ளனைத்தையும் வாட்டி அவனைத்தனியனாக விட்டனர். அப்போது சூரன் மனந்தளர்ந்து தேரிலிருந்தபடியே சற்று நேரம் யோசித்திருந்தனன். அதனைக்கண்ட தேவர்கள் சந்தோஷப் பெருக்காற் குமாரசுவாமி மீதிற் கற்பகமலர்களை இறைத்துப் போற்றினர். இப்படிப் பகை வருடைய வீறுப்பைக்கண்ட சூரன் மின்னலைப்போலத் தேருடன் மறைந்து அண்டகோளகை மேல்வாயிலினருகில் தோன்றிக் கொக்கரித்துச் சூரனைற் சண்டைக்கு வரக்கடவை யெனக் கூவிப் புஜங்களைத்தட்டி நின்றதனை எமதிறைவன் தெரிந்து துரிதமாய்த் தமது தேரை அத்தலத்திற் கொண்டுபோய்ப் போரால் அசுரனைச்சிக்குப் படுத்தும்போது சடுதியில் அவன் மற்றொரு அண்டத்திற் பாய்ந்தனன். சண்முகரும் சலியாமற் சூரன் முன்னம் சேர்ந்து தமது படைகளால் அவனைத் திகைக்கும்படி சாடும்போது பாதகன் அதனைக் கடந்து தன் காவலிற் பட்டமற்றைய வண்டங்கள்தோறும் பாய்ந்து பாய்ந்துவரச் சரவணபவனும் அவனைவிடாது பின் பற்றிப்போய் அகோரயுத்தங்களைச் செய்து வரும்போது சிவகுமாரனுடைய தோற்றங்காணுத காரணத்தாற் பிரமனதிதேவர்கள் மனச்சோர்வுடன் ஸ்ரீவிஷ்ணுவைச்சேவித்து வேலாயுதமூர்த்தியானவர் பாதகனைவிடாமற் பின்பற்றி மேலே யண்டங்களினும் போயினர். சூரன் மாயையினல் என்ன கொடுமை விளைகின்றதோவெனத் தாயைப்பிரிந்த கன்றைப்போலக் கிலேசிப்பதைக் கேசவன்கண்டு நகைத்தவராய் ஓ! தேவர்களே! பயப்படவேண்டாம். தேவாதிதேவனகிய சிவபிரானே சண்முகார விந்தங்களைக் கொண்டு இப்பிள்ளைப்பருவத்தனய் வந்தவ னல்லது வேறு அவன் மகிமைகளைச் சொல்லயாவாராலாகும்! சற்றுநேரத்தில் அப்பாதகனைக்கலந்து குமரேசன் வரவிருக்கின்றதை நீங்கள் கண்டு களிப்பீர்களென்று பரந்தாமன் சிவகுமாரன் மகிமைகளைப் பலவிதங்களி லெடுத்துச் சொல்லத்தேவர்கள் களித்திருந்தார்கள். இவைநிற்கச் சூரனனவன் தனது இந்திரஞாலத்தேரைச் செலுத்தி ஆயிரக்கோடி அண்டங்கள்தோறும் மின்னலைப்போல மாறிமாறி உலவுகின்ற காலத்திற் குமாரக்கடவுளும் பின்வாங்காமல் அவனைத்தொடர்ந்து தமது அமோகப் பாணங்களாற் போராடிச் சூறைக்காற்றைப் போலத்தங்கள் தேர்களைத் திருப்பித் திருப்பி ஒருவரோடொருவர் நெருங்கிச் சண்டைகொடுத்த

விதங்களை என்னசொல்வோம்! இவ்விதங்களில் வாதாடிய சூரன்கை
டசியிற் சமுத்திரமத்தியில் விளங்கும் தனதுவீரமாமயேந்திரபுரியை
ச்சமீபித்தனன் சரீரநிழலைப் போற்குமாரசுவாமியும் அவ்விடம் அவனை
அதிக உக்கிரத்துடன் தொடர்ந்தபோது அத்தலத்திற் கூடியிருந்த
பெரும்புறக்கடலைப் போன்ற சதுரங்கசேனைகளானவை தமது சக்கிர
வர்த்தியை வாதாடிவரும் இந்தப்பாலன் வீறுப்பை அடக்குவோமெ
னப் பலவிதங்களில் வந்து போராடுவதைக் கண்ட எமதையன் அவர்
களைக் கோபித்துப்பார்த்தனர். அதனால் அவர்களனைவோருஞ்சாம்பலா
யெரிந்து போனார்கள். தேவர்கள் அம்மம்ம! இத்தகைய சேனைப்பெரு
க்குகளை யெல்லாம் இவ்விதம் யாவரால் நாசப்படுத்தக் கூடுமெனக்
குமாரசுவாமியை வாழ்த்திக் களித்திருந்தார்கள். இவ்விதமாய்க்
குமாரதேவருடைய சிற்றவழலினால் தனது பட்டணத்துச் சயினி
யங்கள் யாவுந் தகிக்கப்பட்ட காலையிற் கோபம் சொலிக்கச் சூரன்
நின்ற காட்சி யெப்படிக் கிருந்ததென்றால், முன் அகஸ்தியர் கட
லைப் போசனஞ் செய்தகாலத்து வடவைதனித்து விளங்கியதிற்
கொப்பாக விருந்தது. இவ்விதமாகச் சூரன் ஒருதுணையுமின்றித்
தான் ஒருவனாய்ப் பாலன் சவுரியங்களை யெல்லாம் எண்ணமிட்டு
இனி யென்னால் முடிக்கவேண்டிய காரியங்கள் ஒன்றையுங் காணே
னென்று சிந்தைநொந்து தனது தாயாகிய மாயையை நினைத்தனன்.
சுமாலியென்னும் பருவதச்சாரலிற் பரமனைக்குறித்துத் தவகங்களைச்
செய்திருந்தவள் கடிகிச்சூரன் முன்தோன்ற அவன் அவளிடம் தனக்கு
ண்டாயிருக்கும் அபஜெயங்களையும் மனச்சஞ்சலங்களையும் தற்கால நிலை
மை வரையிலெடுத்துரைத்து மாண்டவர்களனைவோரும் ஒரேசமயத்
திலெழுவதற்கு ஒரு சூழ்ச்சியைச் சொல்லக்கடவாயெனப் பிரார்த்தி
க்க, மாயையானவள் அப்பா மகனே! உன்னை யொத்தவன் இக்காலத்
தில் யாவையும் யாரையும் இழந்து இப்படித் தனித்திருக்கவும் பெறு
வதோ! இன்னமும் தேவர்களை விடுதலைசெய்து மகதைஸ்தரியங்களை
யனுபவித்திருக்க நினையாமற் சண்முகப் பெருமானுடன் பகைத்துச்
சண்டை செய்வதாய் நினைந்திருப்பதாகக் காண்கின்றது? ஆதிதேவ
னே இந்தப் பிள்ளை வடிவங்கொண்டு தோற்றி யிருக்கின்றனன். தலை
யிலெழுத்தை மாற்றினவர் கிடையாது. தீர்காலோசனை செய்து நட
ந்து கொள்ளக்கடவாய். இவைநிற்க, உன் கருத்தின்படி யிறந்தவர்
களை யெழுப்பப் பெரும்புறக் கடலினருகிற் குளிர்ந்த கிரணங்களை

விசுஞ்சஞ்சிவி விளங்கியிருக்கும் மந்திர கூடபருவதத்தைத் தருவிப் பையாயின் உன் எண்ணங் கைகூடுமெனச் சொல்லிச் சூரன் நினைவு பேதியாத காரணத்தால் அவனை வெறுத்துக்கொண்டு தன்னிருப் பிடம்போய்ச் சேர்ந்தனள். அவுணர்பெருமான் தன் மனச்சஞ்சலங் களைப்போக்கிச், சஞ்சிவி கொண்டுவர வேறொருவரு மில்லாமையால் தனது சிங்கவாகனத்தை நினைத்து அது வந்தவுடன் தான் ஏறியிருந்த இந்திர ஞாலத்தேரை விட்டுக்குதித்து அந்த மிருகராஜன்பேரில் ஆரோகணித்துக் கொண்டு இரதத்தை நோக்கி, நீவிரைந்து சென்று சஞ்சிவி உண்டாயிருக்கும் பருவதத்தை நிமிஷத்திற் பெயர்த்தெடுத்துக்கொண்டுவரக் கடவாயெனக் கட்டளையிட்டனன். மகத்துவம்பொருந்திய அத்தேரானது அசுரமகாராஜன் கருத்தின்படிக்குப்போய்நிமைப் போதில் மந்திரகூடத்தை வேருடன்பறித்து மீண்டு வீரமாமயேந்திர புரிக்குச் சமீபத்தில் வந்தபோது சஞ்சிவியின் பரிசம்பட்டுஇரணக்களமுற்றும் பரந்தவாயுவினது முயற்சியினுல் அதுவரையிற் குமரக்கடவுளால்மாண்ட சூரனது சதுரங்கசேனைகளும் மற்றப் பிரமுகர்களும் குபீலென்றெழுந்து கொக்கரித்து அட்டகாசங்களைச் செய்து அண்டகோளகை வெள்ளிடைகள்தோறும் எள்ளிடவிடமில்லாமல் நெருங்கி நின்ற விதங்களைச் சொல்லி முடிவதன்று. சிங்கமுகன், பானுகோபன், வச்சிரவாகு, மூவாயிரவர், தருமகோபனுதி மந்திரி பிரதானிகள், சேனைத்தலைவர் யாவரும் உயிர்பெற்றெழுந்து தங்கள் தங்கள் பகைவரைத்தேடி எங்கேயெங்கே யென்று உக்கிரத்துடன் கிளம்பிவர இந்திரஞாலத் தேரானது தனது இறைவணுகிய சூரன் முன் வந்து மின்னலைப்போல நின்றது. சூரன் தன்தேரின் மருந்தின் மகிமையினுல் இறந்த சகலரும் சிவந்தரா யெழுந்தனரென்று தன் தாயைப்புகழ்ந்து தரித்திரனுக்குக் கஜேந்திர சம்பத்துக் கிடைத்ததுபோலத் தன்னை மறந்து சற்று நேரத்திற் பகைவரை வாட்டுகிறேனென்று வீறுப்புடனிருந்தனன். தேவர்கள் அவன் உற்சாகத்தைக் கண்டுதிகைத்து மயங்கிப்பலபறவைகளின் உருக்களைக்கொண்டு திசாதிசைகளிற் பறந்து பரந்தொளித்தனர். வீரவாகு தேவராதியர் அற்புதமடைந்து ஏதோகாரணந் தெரியவில்லையென்று நடுங்கி யசைவற்றிருந்தனர். இவ்வுற்பாத விளைவை நமது கடவுளாகிய பாலசுப்பிரமணியதேவர் தெரிந்து சுவாலைவீச நகைத்து இன்னமும் இவர்கள் செய்கையை அறிவோமெனப் பார்த்திருந்தனர். அக்காலையில் உயிர் பெற்றெழுந்த சிங்கமுகனுதியர்

கள் சூரனைக்கண்டு வணங்கி ஓ! தீரனே! தேவரீர் இவ்விடத்தில் வேடிக்கை பார்ப்பதாகத் தங்கியிருந்து அடியேங்களுக்குச் செலவு கொடுப்பீராகில் இந்தப்பாலகனைத் திசைதப்பியோடப் பறக்கடித்து மற்றப் பகைவர்களையும் ஒரு நொடிப்போதில் வாட்டித் திரும்புகின்றோமென அவுணராஜனிடம் வருதிபெற்று முருகப்பெருமானை நோக்கிப் பூதர்கள் யாவருந்திகைத்துவாட அதிக உத்தண்டங்களுடன் மேலிட்டுவருந்திறங்களை எமது சரவணபவன் தெரிந்து கோபித்துச் சதாசிவமூர்த்தியின் அம்சையில் தோன்றிய பாசுபதத்தை யெடுத்துப் பூசித்துப் பிரயோகித்தனர். அந்தப் படையானது கோடி சூரியப்பிரகாசமாய் வெளிப்பட்டுப் "பக்பக்" கென்றெரிந்து அளவிறந்த தேவாஸ்திரங்களை உண்டாக்கிக்கொண்டு தோன்றியிருந்த அவுணராஜன் வர்க்கங்களுடன் மற்றயாவரையும் பாக்கியில்லாமல் ஒரு நொடிப்போதில் நாசப்படுத்திய தன்றி இந்திரஞாலத்தின் பேரில் விளங்கியிருந்த சஞ்சீவி மலையையும் பிளந்து நாசப்படுத்தி வானகங்கையிற் படிந்து பரிசுத்தமாய்த் திரும்பி நமது குமரக்கடவுளின் திருக்கரத்தில் வந்தமர்ந்து விளங்கியது. அந்தத் தெய்வீகப் படையினது மகத்துவங்களை ஆதிசேஷனாலும் பேசப்படாதெனின் ஒருநாவுடைய யெம்மா லெப்படியாகும்! இவ்விதம் சகலவளங்களையும் திரும்பப்பறிகொடுத்துக் கொடியபாதகன் எண்ண மிட்டிருப்பதைக் கண்ட வீரவாகு தேவராதியரும் தேவர்களும் குமாரசுவாமியைக் கொண்டாடிக் கூத்தாடிய திறங்களையாம் இங்கு என்ன வெடுத்துரைக்கப் போகின்றோம்? அவுணர்பெருமான் துக்கசாகரத்திலழுந்திப் பின் தனது இந்திரஞாலத்தேரை குறித்து, இந்தசிறுவனைச் சூழ்ந்திருக்கும் பூதவெள்ளங்களையும் அவர்கள் தலைவர்கள் எவரையும் இந்நிமிஷத்தில் உன் மாயப்பெருகினால் மயக்கிச்சேர்த்து வாரிக்கொண்டுபோய்அண்டவெல்லையினுச்சியில்வைத்து நாம் மறுகட்டளையிடும்வரை காத்திருக்கக் கடவாயெனப்பணித்த காலையில் அந்தஇரதமானது பூமண்டலப்பரப்புமுற்றும்விரிந்துபெரும் இருளை மூடிப் பகைவர் மதியை மயக்கிப் பிரேதங்களாகத் தள்ளித் தன்னிடத்திற் சேர்த்துக்கொண்டு சரேலென வானத்திலெழுந்து அண்டத்தின் உச்சியிற் கொண்டுபோய் வைத்திருந்தது. அந்தத்தேரின் காரணங்களை ஒருவகையாகவும் சொல்லிமுடிவதோ! இவ்விதமாகப் பாலசுப்பிரமணிய தேவர் ஏகாங்கியாக நிற்பதை அவுணர்பெருமான்கண்டு தன் தேகங்குலுங்கக் குலுங்கநகைத்தனன். அதனை எமதி

றைவன் தெரிந்து கோபங்கொண்டவராய் ஒரு திவ்யபாணத்தை யெ
டுத்து விட்டனர். அப்படையானது வெற்றி வேலாயுதத்தை யொப்
பச்சொலித்து நிமைப்போதில் அண்டமுகட்டைச் சேர்ந்து இந்திர
ஞாலத்தேரின் வலியையடக்கி அதனைத் தள்ளிவந்து சரவணபவன்
சந்நிதானத்திற் சேர்த்தது. எமதிறைவன் அதனிடத்துள்ள தம்மவர்
கள்பேரிற் கிருபாநோக்கம் பாலித்தனர். உடனே யாவரும் மயல்
ஒழிந்து எழுந்து சரவணபவனைச் சேவித்துப் போற்றிச் சூழ்ந்திருப்
பதாயினர். முருகக்கடவுள் இந்திரஞாலத்தேரைப் பார்த்து, நீநம்மி
டத்தில் இனிச்சேர்ந்திருக்கக்கடவையெனத் திருவாய்மலர்ந்த பிரகாரம்
அது திருக்குமாரன் ஆக்ஞைப்படிக்குச் சூரனிடம்போகாமல் நின்று
விட்டது. சூரனுக்கு அதிகக் கோபம்பிறந்து அண்டங்களதிரக் கர்ச்
சித்துத் தனது பாரித்தவில்லிற் சுடுசரங்களைப் பூட்டிவிட்டுச் சிவகுமா
ரன் தேரைநடாத்தும் வாயுதேவனின் சரீரமுற்றும் உதிரம் பெருகத்
துளைத்து வாட்டினன். சிங்காரவேலர், வாயுதேவனிடத்திற் கிருபாநோ
க்கம் பாலித்தவராய்த் தக்ஷணத்தில் ஒரு திவ்யபாணத்தால் யாவ
ருங்கொண்டாடச் சூரன் கரவில்லைத் திடீரென இருதுண்டாக்கித் தள்
ளினர். அவுணர்பெருமான் அதிக உக்கிரத்துடன் சிவகடாக்ஷத்திற்
பெற்ற முத்தலைச் சூலமொன்றை யெடுத்துச் சிங்கவாகனத்தில் ஆரோ
கணித்துத் தூண்டிக்கொண்டு குமாரதேவரின் இரதத்தின் அருகில்
வர, அந்த மிருகராஜன் கடிகிப்பாய்ந்து தனது கூரிய நகங்களையுடைய
வலியகால்களாற் சரவணபவன் இரதக்குதிரைகளைப் பதைபதைக்க
அறைந்து உதிரப்பிரவாக மெடுக்கச்செய்து விட்டது. சூரனும் அது
சமயத்தில் தனது சூலத்தை வலிகொண்டு சிவகுமாரனைப் பின்னப்படு
த்துவதாகப் பிரயோகித்துக் கர்ச்சித்தனன். அது தாவிப்பல தேவா
ஸ்திரங்களையும் பூதகணப்பெருக்கையும் சிருஷ்டித்துக்கொண்டு யாவ
ருந் திடுக்கிடவரும்போது எமதிறைவன் சங்கையற்ற பாணங்களை
அதின் பேரில்விட்டும் அவைகளை யெல்லாம் அது கவளீகரஞ்செய்து
கொண்டு மேலிட்டுவருவதைக் குமாரசுவாமியார் தெரிந்து தமது வெற்
றிவேலாயுதத்தைப் பிரயோகிக்க அது வெளிப்பட்டுச் சூலத்தின் முத்
தலைகளையுஞ் சேர்த்துப் பிடித்திழுத்து வந்து கந்தசுவாமியினிடஞ்
சேர்த்து விட்டது. அந்த மகிமையைக் கண்ட தேவர்கள் ஓ! தேவாதி
தேவா! பக்தவற்சலா! துரிதமாகச் சூரனைக்கொன்று எங்களை இரட்

சிக்க வேண்டுமென்று போற்றுகின்றபோது சூரன் ஒரு மோகனமந்திரத்தை உச்சரித்துக் காத்திரதேகத்தையும் பரந்த சிறகையும் வயிரத்தையொத்த மூக்கையும் கூரிய நகப்பந்திகளையும் வேகத்தையுங் கொண்ட ஓர் சக்கிரவாகப்பட்சி உருக்கொண்டு பூமண்டல முற்றும் தத்தளித்துப் பிளக்கத்தக்கதாகப் பூதசயினியங்கள் மத்தியில் தாவி அவைகளை நிலைகுலையப் பலவாறாகச் சாடிமாய்த்தும் சாரதியாகவிருக்கின்ற வாயுதேவனைக் குப்புறவிழுந்து களைக்கச்செய்தும் தேர்ப்புரவிகளைத்தாக்கியும் தேவர்களைத்திகைக்கச் சாடிப்பறக்கடித்தும் இவ்விதங்களிற் காற்றாடியைப்போலச் சுழன்று சுழன்று போர் புரியும்போது கிருபைக்கடலாகிய எமதிறைவன் பிராணிகள்படும் உபத்திரவத்திற் கிரங்கிக் கோபநகைகொண்டு அவுணராஜன் விஞ்சை வெகு நேர்த்தியெனப் பல கோடிசரங்களை அவுணராஜன்பேரிற் பிரயோகித்தனர். அவைகளனைத்தையும் அசுரபட்சியானது தனது சிறகடி மோதலினாலும் கூரிய நகங்களினாலும் உறுதிபெற்று விளங்கும் மூக்கினாலும் நாசப்படத்துள் பமித்தினது மல்லாமல் மேலிட்டும் வந்து பூதர்களை அமோகமாய்ச் சாடிக்கொல்வதனைச் சர்வாந்தர்யாமியாகிய எமதிறைவன் பட்சி உருக்கொண்டு போராடுகின்ற சூரனை நம்மையொத்தவன் தேரிலிருந்து வாட்டுவது நீதிக்கடாதென்று இந்திரன் மீதில் தமது விழிகளைப் பரப்பிய மாத்திரத்திற் கர்த்தன் திருவுள்ளக் குறிப்பைத்தெரிந்து அவன் மகாபாக்கியமென்று தக்ஷணத்திற் பசியதோகையை வாய்ந்த பருத்தமயிலின் உருவைக்கொண்டு சத்தசாகரங்களும் நாசப்படத்தக்கதாப் பறந்து சண்முகவேலர் சந்நிதானத்தில் வந்து வணங்கி நின்றனன். சண்முகப்பெருமான் அவன் பக்திவிசுவாசத்திற்குக்கிருபானுக்கம் பாலித்துத் தமது திருத்தேரை விட்டிறங்கி வீறி நிற்கின்ற மஞ்ஞைவானகத்திற் கம்பீரமாக வீற்றிருந்து சூரன் புள்ளுருக்கொண்டு விண்ணுலகத்தில் உலாவுமிடங்களில் அதைச்செலுத்திப்பிரசண்டமாருதத்தைப்போல அவுணர்பெருமானை மடக்கிப்போர்த்தொழில்செய்ய எத்தனித்தனர். இக்காரியங்களைத் தெரிந்த சூரன் இந்தப்பாலகன் சூழ்ச்சி வெகுநேர்த்தியெனச் சீறி ஆர்ப்பாடங்களுடன் தாவித் தோகைவாய்ந்த இந்திரனைப் பகைத்து அவன் உடல் முற்றும் உதிரம்பெருக்கெடுத் தோடப்பற்பல விதங்களிற் கொடுமையாகச் சாடினான். மகபதியும் அவைகளைச் சட்டைபண்ணுமற் சூரன்போகும் கதிமாறித் திகைக்குப்படிக்குச் சாடி உரப்பியசமயத்

தில் எமதையன் தமது வாகனத்திற்கு நேர்ந்த துன்பத்திற் கிரங்கிப் பின் தீயெழநகைத்துத் தமது பாணகோடிகளைச் செலுத்திச் சக்கிர வாகனத்தின் தலை விழிகளைப் பின்னப்படுத்தித் தேகத்தில் ஊசிநாட்ட விடமில்லாமல் துளைத்து உதிரத்தைப் பெருக்கியும் கால்களை முறித்தும் இறகுகளை ஒடித்தும் இவ்விதங்களிற் சாடினார். புள்ளுருப்பெற்ற சூரன் பதைபதைத்து நடுநடுங்கி மிகவும் வருந்தியபோதினும் வீராதிவீரனாகையாற் சற்றும் இளையாமல் வேலாயுதப் பெருமானுடைய கரத்தில் விளங்கும் நெடிய வில்லை கட்டித்தொடிக்க நினைந்து அதிவேகமாய்த் தனது வாயைத்திறந்து மேலிட்டு வருகின்றதனைச் சிவகுமாரன் தெரிந்து அவன் சமீபித்த மாத்திரத்தில் தமது திருக்கரங்களிலொன்றினால் வாளாயுதத்தினை ஒருவிசை விதிர்த்தோங்கிப் பகைவன் கொண்டிருக்கும் பறவை உருவானது இருகூறாய் விழத்தக்கதாக வீசினார். அழிவற்ற வயிரதேகம் பிளக்கப்பட்டதனைத் தேவர்கள் கண்டு சுவாமியின் வீரத்தன்மைகளைக் கொண்டாடி மலர்களைச் சொரிந்து களியாடல்களைச் செய்த விதங்களைச் சொல்லி முடிவதன்று. அதனைச்சூரன் தெரிந்தவுடன் தக்ஷணத்திற் பூமண்டலமெங்கும் பரந்து வானவரையில் உயர்ந்து சாட்டும் மணல் மேட்டின் வடிவைக்காட்டி யாவரும் நடுங்கத் தூளியைப் பெருக்கி நின்றனன். சிவகுமாரன் அந்த மாயவஞ்சனையைத் தெரிந்தவராய்த் தமது ஏழுபாணங்களைப் பிரயோகித்துப் பெருஞ்சலப் பெருக்கால் நிமைப்போதில் அதனை முற்றுங்கரைத்து உருத்தோற்றாமல் அழித்து விட்டனர். அத்தருணத்திற் சூரன் பெருவெள்ளத் தோற்றங்கொண்டு பேரொலியுடன் அலைகளைவீசி சமஸ்தமும் பிரமைகொள்ளப் பரந்து காணப்படுவதைச் சண்முகர் பார்த்து வெகு நேர்த்தியென்று நகைத்து நூறு பாணங்களைப் பிரயோகித்தனர். அவைகள் ஊழித்தீ போல் மண்டி யெரிந்து பாய்ந்து சூரன் மாயைச் சலப்பெருக்கனைத்தையும் கிரஹித்து மீண்டன. இதனைப் பாதகன் தெரிந்து ஊழித் தீயின் உருக்கொண்டு அண்டகோளகை பரியந்தங் கொழுந்து விட்டெரிந்து கொடுமைகள் செய்து நின்றனன். குகநாதன் ஆயிரம் சரங்களைப் பிரயோகிக்க அவைகள் வெளிப்பட்டுத்தீயின் காரணம் எவ்வளவுந்தோன்றாமல் நிமைப்போதில் நாசஞ்செய்து மீண்டன. சூரன் பெருமூச்செறிந்து பிரசண்ட, மாருதவடிவைத் தாங்கி ஓ வென்னும் இரைச்சலைக் காட்டிப் புவனங்கள் தத்தளிக்க மோதிவருகின்றதனை லோகநாயகன்

கண்டு பதினாயிரம் பாணங்களைச் செலுத்தினர். அவைகள் அந்த
வாயுவின் பெருக்கை உண்டு பரிசமறப் போக்கிவிட்டன. இதனை
வாசிக்கும் நமது நண்பர்கள், மகாவீரதீரனாகிய இந்தச் சூரனுடைய
மகத்தாகிய மாயவஞ்சகத் திறங்களின் பெருமிதங்களை நிதானித்துக்
கொள்வார்களென நம்புகின்றோம். அம்மாயைகளெல்லாம் நம்மை
ஆட்கொண்ட குமரக்கடவுளுக்கு முன் என்ன செய்யக்கூடும்? அம்
மாயைகள் அனைத்தையும் நிமையிற்பறக்கடிக்கவல்ல இத்தகையகுமார
சுவாமினுடைய கிருபைக்குப் பாத்திரமாயிருக்கப்பட்ட மேலோர்க
ளின் பெருமைகளை நாம் என்ன விதமென்று எடுத்துப்பேசுவோம்!
இவை நிற்கச் சூரன் நான்குதினம் வரையில் ஊண் உறக்கமற்று இவ்
வித அகோரயுத்தங்களைச் செய்து பின் ஒரு நூதன ரூபத்தாற் சிவ
குமாரனை வெல்லக்கருதி முத்தொழிலை நடாத்தும் பிரமனாகவும் விஷ்
ணுவாகவும் உருத்திரனாகவும் தோற்றங்கொண்டு பல கொடிய அஸ்
திர சஸ்திரவிதங்களை யேகோபித்துச் சொரிந்து பல தேவர்களின்
வடிவங்களையும் அசுரர்களின் உருவங்களையும் பூதர்களின் உருக்களை
யும் பஞ்சபூதங்களாகவும் ஓரேசமயத்தில் உண்டாக்கி அண்டமதிரக்
கர்ச்சித்துப் பலவகை மொழிகளைப் பேசி மகா ஆர்ப்பாடங்களுடன்
வந்தகாலையில் எமது குமாரசுவாமியானவர், தேவர்கள் படுந்துயரங்க
ளுக்கு இரங்கினவராய் ஆயிரம் திவ்ய பாணங்களை மந்திரபூர்வமாகச்
செலுத்த அவைகள் மகா மகத்துவங்களுடன் ஒன்றனந்த கோடிகளா
கப் பெருகிப் பாதகன் கொண்டிருக்கின்ற மாயாரூபங்களனைத்தை
யும் கண்டித்துப் போக்கிச் சூரன் திடுக்கிட்டுத் தியங்கத்தனிமையில்
அவனை விட்டு, விண்ணவர் கர்த்தனுடைய வீரபராக்கிரமங்களுக்கு
அதிசயித்துத் துதித்துக் கொண்டாடும்படிக்குத் திரும்பிவந்தடைந்த
ன. இப்படிக்குச் சகலமுயற்சிகளும் மங்கி எண்ணமிட்டுக் கொண்டு
நிற்கின்ற சூரமகாராஜனைச் சிவகுமாரன் பார்த்துத் தயவாய்த் திருவு
ள்ளம்பற்றுவதாயினர். அவுணர் பெருமானே! கேட்பாயாக! காருண்
டி கரிய மேக சமோகங்களிடத்திலிருந்து சொலித்தடங்கும் மின்னற்
கொடிகளைப் போல நமது முன்னம் பற்பல உருவங்களைக்கொண்டு
வாதாடிவந்த உன் முயற்சிகள் அனைத்தையும் நாம் ஏவிய பாணங்
கள் நிமைப்போதில் நாசஞ்செய்ததை நீ கண்டாய்! நிலைபெறுதவஞ்ச
கப் போரைச்செய்து வெல்ல நினைந்த பேதாய்! எக்காலத்தும் சலன
மற்று நித்தியமாக விளங்கும் நமது பேருருவைக் காட்டுவோம். தெரி

சிக்கக்கடவாயெனத் திருவாய்மலர்ந்தருளிச் சத்த சாகரங்கள் பெரும் புறக்கடல் சூழ்ந்த பூமண்டலம் அதிற்பட்டதிசைகள் தீவுகள் விண்ணுடுகள் எறும்புமுதல் யானை யீறாகச் சொல்லாநின்ற எண்பத்து நான்கு லெட்சம் சீவபேதங்கள் முப்பத்துமுக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் கருடகாந்தருவர் சித்தவித்தியாதரர் பன்னகர் உவனர் கின்னரர் கிம்புருடர் ஏகாதசவுருத்திரர் துவாதசாதித்தர் சூரியர் சந்திரர் முதலிய நவக்கிரஹங்கள் இருதுக்கள் காலங்கள் முதலிய சமஸ்தமும் ஆதிதேவனாகிய சண்முகப்பெருமாளின் திருமேனியில் அமைந்ததலலது வேறொன்றில்லை யெனச்சகலரும் திருஷ்டாந்தமாகத் தெரிசித்துக் கிருதார்த்தராதற் பொருட்டு விஸ்வரூபத்தைக் கொண்டருளினர். இவ்வித மிகுந்த பிரகாசத்தை எறிந்து விளங்கும் திருமேனியின் பொலிவைத்தவத்தையுடைய தேவர்கள் தெரிசித்த மாத்திரத்தில் மனம் நடுங்கிச் சோர்வடைவதனைச் சிவ சுப்பிரமணியக்கடவுள் தெரிந்து அவர்களில் இரக்கமுற்றுப் பேரொலியெழப்பயப் படாதீர்கள்! பயப்படாதீர்கள்!எனத்தமது திருக்கரத்தை யமைத்துக் கிருபானோக்கம் பாலித்தவுடன் தேவாமுதத்தாற் களைதீர்ந்தவர்களைப் போல அவர்கள் மனங்குளிர்ந்து களித்திருந்தனர். அத்தருணத்திற் சிவகுமாரன் சொரூபக்காட்சியைச்சூரன் கண்டு பிரமித்துத்தன் செயலற்று நின்று விட்டனன். சண்முகப்பெருமாள் அவனிடத்தில் இரக்கமுற்றுச் சிறிது ஞானவுணர்ச்சியை அவனுக்கு அனுக்கிரகம் செய்தனர். நல்லறிவு தோற்றிய மகிமையினாற் சூரன் இவ்விதங்களில் நினைப்பதாயினன். இது வென்ன பெரிய ஆச்சரியம்! நாம் இந்தக் குமாரசுவாமியைப் பாலன் பாலனென்று பேசி யேசி நமக்குத்தகுதியாகிய காரியங்களை யெல்லாங் கைவிட்டு மதிமோசம் போனோம், யாவருக்கும் மூலகாரணமாகிய தேவன் இவனல்லது வேறொருவரில்லை, இதில் எவ்வளவும் பிசகில்லை, இக்காரணங்களை முன் நமக்கு எடுத்துச்சொன்ன வீரவாகுதேவரல்லாமல் நம்முடையதுணைவர்களின்பேச்சுக்களைக்கூட நாம் மகதயிஸ்வரியச் செருக்கால் அலட்சியமல்லவா செய்திருந்து விட்டோம்,இக்காலத்தில் நாம்செய்ததவப்பெற்றால் தேவதேவோத்தமன்இவனென்று நிஜதெரிசனையாகக் கண்டு கொண்டோம், இனி நமக்கு ஒருகுறைவில்லை, மனதிற்கு அமையாத தெவிட்டாத இத்தெள்ளமுதின் பெரிய காட்சியைப் பூர்த்தியாகத் தெரிந்து புகழ்வதற்கு அனந்தகோடி கற்பகாலஞ்செல்லும், இக்காட்சிமிகவும் பிதிக்கிடமாக

வும் இருக்கிறது, இத்தகைய மனோவாக்குக்கெட்டாத குமரன் என்
னையும் ஒரு பொருளாக மதித்துச் சண்டைகொடுக்க நேர்ந்ததை யோ
சிக்க இதுவுமொரு திருவிளையாடலாகவும் அருள்திறமாகவுமே காண
ப்படுகின்றது, நமது வலது பாரிசப்புயமும் நேத்திரமும் துடிக்கின்ற
னவே, யாவருக்கும் எட்டாத இந்தப் பரம்பொருளை நாம் உள்ளங்கை
நெல்லிக்கனியைப்போல் இக்காலத்தில் காணும்படிக்குப் பாக்கியம்
பெற்றோமாகையால் நாம் இனிக் காலதாமதம் செய்யாமல் இந்தத்
தேவனை இப்போதே நமது பாதங்கள் வருந்தப் பலதரம் பிரதட்சணம்
வந்து சிரமானது பூமியிற்படிய வணங்கிக் கரங்களைக்கூப்பி இந்தச்
செனனத்துக்கத்தைப் போக்கிச் செல்வச் செருக்காற் செய்திருந்த
பழி பாதகங்கள் அனைத்தையும் ஒழித்துக் கொள்ளவேண்டும், இந்தக்
கடவுளை நமது வாயார வாழ்த்தி அவனுக்கு அடிமைப்படவேண்டு
மென்று முயற்சித்த காலையில் எமது குமரக்கடவுளானவர் சூரனுக்கு
அனுக்கிரஹித்திருந்த போதவுணர்ச்சியை மாற்றித்தாமும் பழய திரு
க்குமார வடிவங்கொண்டு மஞ்ஞைவாகனத்தில் அழகுறப் பொலிந்து
விளங்கித் தோன்றுவதாயினர். அவ்விதம் தனக்கு முன்னே தோன்றி
நின்ற குமாரதேவரைச் சூரன் கண்டவுடன் ஆ! நாம் என்ன காரியஞ்
செய்ய துணிந்தோம்! நன்றாயிருந்தது! வெகு நேர்த்தி நேர்த்தி! இந்
தப்பாலனுக்கு அஞ்சியோ நமது வீரபராக்கிரமங்களை மதித்துப்பாரா
மல் இவனை வணங்கி யிருப்பேனென்று சுவாமியின்பேரில் அடங்காத
கோபங்கொண்டு நீ என்னை ஒரு மாயவித்தையை காட்டி வஞ்சிக்க
வந்தாயோ! இதோ பாரென்று ஒரு மாயமந்திரத்தை உச்சரித்துப்
பூமண்டல முற்றுந் தத்தளித்து வாட, வீங்கிய இருட்பெருக்கை யுண்
டாக்கித், தான் ஒருபாரித்த காத்திரமுள்ள தேகத்தைக்கொண்டு
விண்ணவர் கூட்டத்தை வாரி வாரி வாயிற் போட்டுக்கொள்ளக் கருதி
முயற்சித்த காலத்தில் தேவர்கள் நடுநடுங்கி நிலைகுலைந்து மதிமயங்கி
அந்தச்சமயத்தில் ஞான நாயகனைக் குறித்துப் பலவாறு கூப்பிட்டுப்
புலம்பி முறையிடுவதானார்கள். தேவாதிதேவனாகிய எமது பாலசுப்பி
ரமணிய தேவர் அவர்களுடைய முறைப்பாடுகளைத் திருச்செவி
களிலேற்றுத் தமது ஒப்பற்ற வேலாயுதத்தின் மீதில் விழிகளைப்
பரப்பி வஞ்சனையால் தேவர்களை வருத்துகின்ற இக்கொடிய பாதகனை
நிமைப்போதிற் போய் அவன் சரீரத்தை இருகூறாகப் பிளந்து மீளக்
கடவாயெனச் செலுத்தினர். உடனே அந்தப் படையானது அளவிற

ல் எம

ந்த மகிமைகளுடன் வெளிப்பட்ட மாத்திரத்திற் பரந்திருந்த சூரனுடைய மாயை இருட்படலமானது பளீரென நீக்கம்பெற்று முன்போல விளக்கம் பெற்றிருந்தது. சூரனானவன் வேற்படையானது தன் மீதில் அதிக விருப்புடன் நெருங்கி வருவதைக் கண்டு நமது வச்சிரதேகத்தை இந்தப்படையென்ன செலுத்தப்போகிறதென்று விசாலமாய் ஆழ்ந்திருக்கும் சமுத்திர மத்தியிற் பாய்ந்து மண் விண் திசைகளை மூடத்தக்க பருத்த மா விருட்ச வுருக்கொண்டு நின்றனன். இவ்வித மரத்தினது உருவைக்கொண்டிருந்த சூரன் மற்றொரு சூழ்ச்சியை நினைந்து யாவும் யாவரும் நிலை குலையத்தக்கதாக வளைந்த கழுத்தும் நீண்டமூக்கும் வெண்மையாய்த் தழைத்த சிறகுகளினால் மூடப்பட்ட காத்திர தேகத்தையும் நீண்ட கால்களையுமுடைய கொக்கின் உருவைத்தாங்கி அந்த விருட்சத்தின் மத்தியில் ஓங்கி யிருக்கும் கிளையில் நிற்பதாயினன். இவைகளை அறிந்த வேற்படையானது அதிகக் கோபங்கொண்டு பூமண்டல வெல்லை முற்றினும் சத்தசாகரப் பரப்பினும் பெரும்புறக்கடலின் எல்லையினும் விண்ணாடுகளினும் வானத்தை அளாவநிற்கின்ற மேரு முதலிய குலகிரிகளினும் அஷ்டதிசைகளினும் அண்டமுகடு பரியந்தமும் அனற்கொழுந்துகளைக் கற்றை கற்றையாக வீசிக்கொண்டு பிரளயகாலத்து உருத்திரனைப்போல வந்து தழைத்தோங்கி நிற்கும் மாவிருட்சத்தின் அடியிற்பாய்ந்து தடாரித்து உருவி அண்டங்கள் அதிரும் ஓசையெழ அதனைப் பிளந்து இருகூறாக்கித் தள்ளியது. மாவின் உருக்கொண்டு நின்ற மகாவீரத்தன்மையும் பெருமைகளும் உடைய வஞ்சகனானவன் பேரொலியெழ அரற்றிக்கொண்டு பின்னப்பட்டு விழுந்தபோதினும் காளகண்ட மூர்த்தியினது வரப்பேற்றால் மாண்டவனல்லாமல் தனது உடைவாளை யுருவிக்கொண்டு சண்டை செய்வதையே முக்கியமாக நினைத்து மேலிட்டுச் சீறி வரும்போது வேலாயுதமானது உருத்திராகாரமாகக் கொதித்து வச்சிரதேகத்தைக்கொண்ட அந்தச்சூரன் வலியமார்பிற் பாய்ந்து அவன் தேகத்தை இருகூறாகப் பிளந்துத்தள்ளி ஜெயப்பிரதாபத்தைப்பெற்றதாகக் கிளம்பி வானகங்கையிற் படிந்து திரும்பி எமது கர்த்தன் திருக்கரத்தில் வந்து யதாப்பிரகாரம் விளங்கியிருந்தது. தேவர்கள் தேகம் பூரித்து ஆனந்தப்பரவசராய்த் தங்கள் வஸ்திரங்களை வானத்தெறிந்து கூத்தாடி ஜெயஜெயவெனப் போற்றிக் குமாரதேவர் பேரில் தேன்களுறுத பஞ்சதருக்களினது புஷ்பமாரிக்களைப் பெய்தார்கள். சூரன் இர

ண்டு கூறுக வெட்டுண்டு விழுந்த தன் உடலைமீட்டும் மகத்தாகியசேவலாகவும் மயிலாகவும் உருவகப் படுத்திக் கொண்டு மகா பல பராக்கிரமங்களைக்காட்டிச் சிவ குமாரனுக்கு எதிரிற் கூக்குரலிட்டு வந்தனன். பாலசுப்பரமணியக் கடவுள் சக்கிரேஸ்வரனாகிய சூரனது காரணங்களையும் அவனிருக்கின்ற கோலத்தையும் கண்டவுடன் அதிகப்பிரியமும் இரக்கமும் அவனிடத்தில் உண்டாகிப் பூர்த்தியாகத் தமது கிருபானோக்கத்தைப் பாலித்தனர். அதன் முயற்சியினால் தக்ஷணத்திற் சூரன் சத்துருத்துவத்தையும் கோபதாபங்களையும் நீக்கிப் பாபரகிதனாய்ப் பத்திவிசுவாசத்துடன் அடங்கி ஒடுங்கிச் சகல விருப்புகளையும் ஒழித்துக் குளிர்ந்த பார்வையைக் காட்டி நின்றனன்.

பிரம்மஹத்தியாதி தீங்குகளைச் செய்துவரும் மகாகர்மிகளேனும் தீன சரண்யனான நமது குமாரதேவருடைய திருமுன்பு நேரப்பெறுவாராயிற் பரிசுத்தவான்களாய் மெய்ஞ்ஞான சம்பத்தைப் பெற்றுமேலான சாயுச்ஜிய பதவியையடைந்து வாழ்வார்களென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? இச்சரித்திரத்திற் சிரத்தையுடைய நமது நண்பர்களே! நூற்றெட்டு யுகங்களாகச் சிவகாருண்யமின்றிப் பரமசிவ பக்தியும் தவவிரதங்களும் உடைய தேவர்களையும் மகத்துக்களையும் முனிபுங்கவர்களையும் மானிடர் முதலியோரையும் அலைத்துவருத்தியதன்றிப் பாலசுப்பிரமணியரிடத்திற் சற்றும் மதிப்பின்றிப்பகைத்து ஆறுதினங்கள் வரைமகாயுத்தங்களைச் செய்திருந்த சூரனுமல்லவோ கிருபைக்குப் பாத்திரமாய்ச் சாசுவதப் பேற்றை யடைந்து வாழவிருந்தனன். ஆதலால், அந்த தேவாதிதேவன் மகத்துவங்களை யாமோ கண்டறிந்து சொல்லக்கூடும்! இத்தகைய முருகன் பெருமிதங்களை விருப்பமுடன் படிக்கும்படிக்கும் கேட்கும்படிக்கும் அமைந்த நமது நண்பர்களைப் போன்ற புண்ணிய சிலர் இவ்வுலகினிடத்தில் ஒருவரும் இருக்க மாட்டார்கள். அந்தத் தேவாதி தேவனுடைய சரித்திரங்களை எம் சிற்றறிவுக்கு எட்டியவரையிற் சுருக்கி யெழுதிவந்த சிறந்த பலப்பிராப்தியினால் அடியேனும் கிருதார்த்தனானேன். இதற்குக் காரணம் இராமநாதபுரம் ஸ்ரீமத் ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல ராஜா முத்துவிஜய ரகுநாத பாஸ்கர ஸேதுபதியவர்களே. இவ்வள்ளற் பிரபு அவர்கள், நமக்கு இத்தகைய பெரிய நன்கினைச் செய்தவர்களாகின்றார்கள். யாம் அந்த ஞான சொரூபியாகிய வேந்தரவர்கள் பால் நன்றியு

டையோ மாக அதிக மனவுற்சாகத்துடன் மற்றைய சரித்திரங்களையுங் கூடியவாறில் ஈங்கெடுத்துரைப்பாம்.

மேற்குறித்த படிக்குத் தமது திருமுன் பவுத்திரமாய் வந்தடைந்த கோழியின் மீது கார்த்திகேயன் கிருபானோக்கஞ்செய்து நீ நமது தேரின்மீது துவசமாக நின்று கூவக்கடவையெனத் திருவாய் மலர்ந்தனர். சேவலானது உற்சாகத்துடன் அப்பணி விடையைச் சிரசாக வகித்து விண்ணிற் பறந்து வெற்றிக் கொடியினுருக்கொண்டு மகத்தாக யாவரும் புகழ விளக்கம்பெற்று நின்றது. உடனே குமாரசுவாமியானவர் தேவராஜன் உருவமாகிய மயிலின் பிடரியினின்றும் பாய்ந்து பயபக்தியுடன் ஒடுங்கி நிற்கின்ற சூரன் உருவகித்திருக்கும் கலாப மயில் வாகனத்தின் மீது வீற்றிருந்து நீ நம்மைச்சுமந்து உலவக்கடவாயெனத் திருவாய் மலர்ந்து பூவட்டமெங்கணும் வானவெல்லை முற்றும் அதனைச் செலுத்தி மகாமகிமைகளுடன் உல்லாசமாக யாவருங் கொண்டாட உலவுவதாயினர்.

இவ்விதம் மயிலின்பேரில் உலாவிவந்த சத்திகரத்தலத்தனாகிய குமாரதேவன், சூரன் பட்டணத்தை அடுத்த சமர்க்களவெல்லையைச் சேர்ந்து தேவராஜனையும் அக்கினி தேவனையும் பார்த்து, அவர்கள் முன் கொண்டிருந்த உருவங்களை மாற்றத் திருவருள் செய்தனர். அப்போது பூதவெள்ளங்களும் எண்மரும் இலட்சரும் படைத்தலைவர் முதலானவர்களும் அதிகஆவலுடன் மும்முறைவலம்வந்து கடவுளைப் பணிந்து போற்றி ஆனந்தப் பரவசராயிருந்தனர். மகாவிஷ்ணு முதலிய தேவர்கள் சரவணபவன் தமதிடத்துக் கொண்ட கருணைப் பெருக்கை நினைந்து நினைந்து களிமிகுதியால் ஓ! சண்முக சுந்தரனே! இனி நாங்கள் மற்றொரு தேவதைகளைப் புகழவறியோம். எங்களைத் தேவரீரே வழியடிமைகளாகக் கொண்டாளவேண்டுமென்று பற்பல விதங்களாகத் துதித்துப் போற்றிய காலையிற் கந்தசுவாமியும் அவர்களிடத்திற் கிருபானோக்கமாக இனி யாதுக்கும் அஞ்சாதீர்களென் ஆதரித்தனர். சூரனாதியர் மாண்ட காரணத்தால் அண்டபுவனங்கள் சராசரங்களனைத்தும் பேரானந்தப்பட்டு விளங்கிக்கொண்டிருந்த வென்றால் அதின் மகிமையை நாம் என்ன எடுத்துரைக்கப் போகின்றோம்?

" இரணியன் புலம்பல். "

அந்தச்சமயத்திற் சிலஅவுணத்தூதர் இரணக்களத்தை விட்டோடிச்சூரன் பட்டத்துத்தேவியாகிய பதுமகோமளை யென்பவளைக்கண்டு வாய் குழற ஓ! மாதாவே! சூரமகாராஜன் பாலசுப்பிரமணியன் செலுத்திய வேலினுற் பிளப்புண்டு இரணக்களத்தில் விழுந்தனனென்று புலம்பும் சத்தமானது அவளுடைய செவிகளில் விஷத்தைப்போலச் சென்றேறிய காலத்தில், இடி முழக்கத்தைக் கேட்ட நாகத்தைப் போலப் பதைபதைத்துத் துடித்து மகாபதி விரதையாகையினுலே உடனே அவள்பிராணனை இழந்தனள். சூரனுடைய மற்றையத் தேவியர்களும் துக்கசாகரத்தில் அழுந்தி வாசனைக்கட்டைகளால்உண்டாக்கப்பட்ட அக்கினிக்குண்டத்தில் மூத்தவளுடைய திருமேனியை முந்தியிட்டுத் தாங்களும் அதிற்பாய்ந்து மேலானபதவியை அடைந்தார்கள். மற்றப் பதிவிரதா சிரோமணிகளாகிய அவுணராஜர் பத்தினிகளனைவோரும் அவ்விதமே தங்கள் தங்கள் கணவர்களின் பிரிவைச் சகியாதவர்களாய் அந்த அக்கினிக் குண்டத்திற் பாய்ந்து பாய்ந்து மடிவதானுர்கள். இவைகள் அனைத்தையும் மீனுருப்பெற்றுச் சமுத்திரத்தில் முன் ஒளிந்திருந்த இரணியனென்பவன் தெரிந்து மிகவும் வருந்தி வானவழியாக இரணக்களம் வந்து தனது பிதாவைக் குறித்துப் பலபல துயரமொழிகளைப் பேசிப் பிரலாபித்து மனத்தளர்ச்சியடைந்து பெருமூச்செறிந்து பின் திடுக்கிட்டுப் பூதவீரருக்குச் சற்று தெரியுமாயின் நம்மையும் க்ஷணத்திற் கொன்றுவிடுவார்களென்று தனது உருத்தோற்ருமல் மறைந்து குலகுருவாகிய சுக்கிராச்சாரியரிடத்திற்குப் போய்வணங்கி அவரைக்கொண்டு மாண்டவர்களனைவருக்கும் திலதர்ப்பணமாகிய கடன்களைச்செய்து முடித்தவுடன் குரவனிடத்திற் செலவு பெற்றுக்கொண்டு, செல்வமானது மமதையில் தள்ளித் துக்கத்துக்கு உதவியாகவிருந்து துன்பத்தில் தள்ளுவதால் அதைவிடப்பகைவேறில்லையெனத் துணிவுகொண்டு தவவேடத்தைத் தாங்கிச் சிவபிரானைச் சித்தத்திலிருத்தித் தவம் செய்திருப்பதானுன்.

"தேவர்கள் சிறை மீட்சி"

இவைநிற்க, வேலாயுதமூர்த்தியானவர் தமது ஒப்பற்ற வீரவாகுதேவரைக் கிருபையாகப் பார்த்து வீராதி வீரனே! சிறையிற்பட்

டுவருந்தியிருக்கும் சயந்தனுதி தேவரைத் தருவிக்கக்கடவை யெனக்
கட்டளையிட்ட மாத்திரத்தில் தேவரானவர் தமது துணைவர்களுடன்
சூரன்பட்டணத்துக்குட் பிரவேசித்து விலங்குபூட்டப்பட்டு வருந்தி
யிருக்கும் தேவர்க ளனைவோருக்கு முன்தோன்றி அவர்களுக்குப்பால
சுப்பிரமணியதேவர் சூரனுதியரைக் கொன்ற சுபச்சமாசாரங்களை
ச்செவிகளுக்கு அமுதாகச் சொல்லி அவர்கள் விலங்குகளை விலக்கி
ச்சிறையைவிடுவித்துச் சண்முகநாதன் திருமுன்பு சந்தோஷத்துடன்
அழைத்து வந்து சேர்த்தவுடன் தேவர்களனைவரும் சரவணபவனை
மயில்வாகனு ரூடராகத் தங்கள் கண்கள் களிக்கக்கண்டு மும்முறை
வலம்வந்து தங்கள் விழிகளில் ஆனந்தவாரி பெருகக்கரங்களைச் சிர
மேற்குவித்துப் பலதரம் விழுந்து வணங்கிப் பலவாறுகப் போற்றி
நிற்கின்றகாலையிற் குமாரதேவர் அவர்களைக் கிருபையாகப் பார்த்து
இனிநீங்கள் யாதொரு துன்பங்களுமில்லாமற் பழயபடிக்குப் பொன்
னுலகைச் சேர்ந்து வாழ்ந்திருக்கக்கட வீர்களெனத் திருவாய்மலர்ந்த
வுடன் அவர்கள் கொண்ட ஸந்தோஷப் பெருக்கினையாம் என்ன
வெடுத்துச் சொல்லுவோம்! இந்திரனும் தன் புத்திரனைக்கண்டு ஆலி
ங்கனஞ்செய்து மகிழ்ந்தனன். சண்முகக்கடவுள், அவுணப் பாதக
ரால் மாண்டுபோயிருந்த பூதர்முதலானவர்கள் அனைவரும் உயிர்
பெற்று வருவதாகத் திருவுள்ளத்தில் நினைத்தவுடன் அவர்கள் அவ்
விதமே உயிர்பெற்றெழுந்து வந்து குகேசனைப் பணிந்து களிப்புற்
றிருந்தனர். சரவணபவன் தமது அருகில் நிற்கின்ற வருணராஜனை
நோக்கி, நீ சூரன்பட்டணத்தை முற்றும் அழித்துவருவாயெனக்கட்ட
ளையிட்டனர். அவன் வெளிப்பட்டு அவ்விதமே வீரமாமயேந்திர புரி
யின் உருமுற்றிலுந் தெரியாமல் தனது ஜலப்பெருக்கால் அதிலிருந்
த அவுணப்பெண்களுடன் தும்சம்பண்ணி அழித்துச் சுவாமியினிடம்
சேர்ந்து பணிந்து தேவர்களனைவரும் கொண்டாட நின்றனன். இப்
படிக்குச் சகலமும் முற்றியவுடன் குமரகுருபரன் மயில்வாகனுரூட
ராய்ச் சகலருந் தம்மைப் புடைசூழ்ந்து வரத்திருச்செந்திற் பதியை
அந்திப்போதில் வந்தடைந்தனர். ஆங்கு தேவர்கள் சுந்தர சண்முக
ரைப் பணிந்து, சுவாமீ! கொடியபாதகரால் நாங்கள் நன்னெறிகளை
யிழந்து பல தீங்குகளைத் தேடிக்கொண்டனம். இப்போது தேவரீ
ரைப் பூசித்து வழிபடும் வரபாலனத்தைத் தரவேண்டுமென்று போ
ற்றுதற்குக் கிருபாமூர்த்தியும் இணங்கினர். உடனே தேவர்கள் சுவா

மிக்குத் திருமஞ்சனமாட்டிச் சகல ஆடையாபரணாதிகளாலும் புஷ்ப
மாலைகளாலும் அலங்காரஞ்செய்து பலகாரவகைகளையும்பழவர்க்கங்
களையும் நிவேதித்துச் சாம்பிராணித்தூபம் கற்பூர நிராஞ்சன முதலிய
சுடர்களைக் காட்டிச் சோடசவுபசாரங்களையும் விதிப்படிக்கு முடித்த
பின்பு தீனதயாபரனை மும்முறை வலம்வந்து அவரது திருநாமங்கள்
முதலியவைகளாற் போற்றி நிற்கின்ற தேவர்களிடத்தில் எமது
தேவாதிதேவனாகிய வேலாயுதமூர்த்தியானவர் அதிகப்பிரியத்துடன்
ஓ! தேவர்களே! உங்களுக்கு இன்னமும் குறைபாடுகளிருப்பினும்
எத்தகைய வரங்கள் வேண்டினும் சந்தேகமில்லாமற் கேட்டுக்கொள்
ளக் கடவீர்களெனக் கிருபையாகத் திருவாய்மலர்ந்தருளினர். (இக்
கதையைப் படித்துக்கேட்கும் நமது நண்பர்களே! குமரக்கடவுளது
இந்தத் திருவருள் வாசகத்தைக் கவனித்தீர்களா? நாமும் இது சம
யத்தில் அந்த வேலாயுத மூர்த்தியினிடத்தில் எதைக்குறித்துப் பிரா
ர்த்தித்துக் கேட்டுக்கொள்வோம்? அந்த அறிவுள்ள தேவர்களைப்
போலவே சகல பேறுகளையுந்தரக் கூடியதாயுள்ள நமது ஆண்டவ
னாகிய சண்முகப் பெருமாளின் சரணாரவிந்தப் பக்தி யொன்றினையே
நமக்கு அக்கடவுள் திருவருள் செய்ய வேண்டுமென்று நாம் முக்கிய
மாய்ப் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.) இவைநிற்கத் தேவர்
கள் தேவதேவோத்தமன் வாக்கியங்களைக்கேட்டுப் பலதரம் பணி
ந்து சுவாமி நாதக்கடவுளே! எங்களைவருத்திக் கோடுங்கோலைச்
செய்து வந்த சூரனை வம்சநாசமறக்களைந்து அளவற்ற காலமாகவரு
ந்திக் கொண்டிருந்த எங்கள் துன்பங்களைப்போக்கிப் பெருவாழ்வைத்
தந்தீர்! இத்தகைய பூர்த்தியாகிய திருவருளைப் பெற்ற வெங்களுக்கு
இன்னம் வேறொருகுறையும் உண்டாயிருக்கப் பெறுமோ? ஆகையால்
எங்களுக்கு இத்தேகம் உள்ளமட்டும் தேவரீருடைய திருவடிகளுக்கு
அன்பு செலுத்தத்தக்க இப்பேற்றினைத் தந்தருள வேண்டுமென்று
பிரார்த்திக்கக் குமாரசுவாமியும் மகிழ்ந்து அவ்வாறே அவர்களுக்குக்
கிருபைசெய்தனர். இவ்விதமாகப்பொழுது விடிந்தவுடன் குமாரதேவர்
தேவசிற்பியால் அங்கு ஓர் விசித்திர ஆலயமொன் றமைக்கச்செய்து
அதில் தமது பிதாவைப் பூசிக்கக்கருத்துக்கொண்டு சிவலிங்கப் பிரதி
ஷ்டை செய்து தேவர்கள் யாவரும் கண்டுகளிக்கப் பூசனைவழிபாடு
களியற்ற அங்குயாவரும் மகிழவீற்றிருந்தனர்.

4.வது. உயுத்தகாண்டம் முற்றிற்று.

ஸ்ரீசுவாமி நாதஸகாயம்.

"5-வது தேவகாண்டம்"

விருத்தம்.

இருப்பரங் குறைத்திடுமெஃக வேலுடைப், பொருப்பரங் குணர்வுறப் புதல்விதன் மிசை, விருப்பரங்கமரிடை விளக்கக்காட்டிய, திருப்பரங்குன்றமர் சேயைப் போற்றுவாம்.

"திருப்பரங்குன்றம் சேர்ந்தது"

சிவகுமாரன் தமக்கினிய சிவப்பரஞ்சுடரைப் பூசித்து வழிப்பட்டவுடன் சகலரும் தம்மைப்புடைசூழ்ந்துவரத் திருப்பரங்குன்றத்தை வந்தடைந்து அவ்வரையின் பேரிற் சரவணபவன் ஏறிய சமயத்தில் அவர் தேவசிற்பியை நோக்கி ஓ! மயனே! துரிதமாய் இந்த விடத்தில் நமக்கும் மற்றத்தேவர்கள் முதலானவர்களுக்கும் தகுந்த விடுதிகள் முதலிய சிறப்புகளை நிருமிக்கக் கடவையென்றவுடன், தேவதச்சனும் அவ்வாறே யாவையும் நிருமாணித்துக் கந்தசுவாமியைப் போற்றிநிற்கக் குமாரதேவர் சிற்பியை மெச்சிப்பின் யாவரும் போற்றத் தமக்கு அமைத்துள்ள ஆலயத்துட்பிரவேசித்துத் திருச்சபையின் சிங்காரமண்டபத்திற் சிங்காதனத்தில் எழுந்தருளியிருந்தனர். அப்போது பராசரிஷி புத்திரர்கள் தம் எதிரிற் கரங்களைக் கூப்பி மெய்ப்பத்தியுடன் நிற்பதற் கிரங்கிக் கந்தசுவாமியார் அந்த அறுவருக்கும் ஞானயோகத்தைப் போதித் திரட்சித்தனர். அத்திறங்களை இருஷிபுத்திரர்கள் பூர்த்தியாகத்தெரிந்து சீவன் முத்தராய் விளங்கிச் சண்முகனைக் கொண்டாடி யிருந்தார்கள். இவை நிற்க, நாம் இனித் தெய்வயானையம்மனை முருகப்பெருமானுக்கு இந்திரன் பாணிக்கிரஹணஞ்செய்து கொடுத்ததனைப் பேசுவோம்.

"தெய்வானையம்மையின் திருமணமுயற்சி."

தீனசரணியனுகிய வெற்றிவேலாயுதக்கடவுளுக்கு மிக்கசவுந்தரியவதியான தனது புத்திரி தெய்வயானை அம்மையை மணஞ்செய்விக்க இந்திரன் கருதினவனுய் இச்சுபவார்த்தையை விஷ்ணுவாதியரிடம்

தெரிவித்தனன். இதைக்கேட்டு அவர்கள் இது தகும்தகும் என்று ஸந்தோஷித்தராய் ஓ! இந்திரனே! நீ அதைத்துரிதமாய் முடிக்கும் முயற்சிகளைச் செய்யக்கடவையெனக் கட்டளையிட்டனன். இந்திரனானவன் அடங்கா மகிழ்ச்சியுடன் மேருச்சாரலில் வாசஞ் செய்திருக்கின்ற தனதுபத்தினி இந்திராணியையும் தனது சுபுத்திரியையும் சீக்கிரம் அழைத்துவரத் தூதுவருக்குக்கட்டளையிட்டனன். அவர்கள்வேகமாய்ச்சென்று இந்திராணியைவணங்கிச்சூரசம்ஹாரம் நடந்து சிறையிற்பட்ட தேவர்களெல்லாரும் மீட்சியடைந்து ஸந்தோஷித்திருக்கின்ற சுபச்சமாசாரத்தைச்சொல்லி, அவருடைய கணவர் இந்த நிமிஷத்தில் அவரையும் புத்திரியையும் அழைத்துவரக் கட்டளையிட்டனர் என்றனர். கற்புக்கரசியானவள் அடங்காச் சந்தோஷத்தோடு அக்காலத்திலிருந்த தேவர்கள் இனங்கள் சூழத் தன்னைக் காவல்கொண்டிருந்த அயிராவதத்தின் பேரிற் புத்திரிசகிதம் ஆரோகணித்துத் திருப்பரங்குன்றத்தை அடைந்து இந்திரன் மாளிகையிற் சேர்ந்தவுடன் அரம்பையர் முதலினோர் அதிக ஆவலுடன் புலோமிசையை யெதிர்சென்று வணங்கி அழைத்துப்போயினர். புத்திரனாகிய சயந்தனும் ஓடி வந்து தன்தாயைக் கட்டிக்கொண்டான். இந்திராணி தேகப்பரவசங்கொண்டு அப்பாமகனே! சரவணபவன் கடாக்ஷத்தால் இயாவரும் கொடுமைகளினின்று வாழ்ந்தீர்களோவென்று பேசியிருக்கும்போது, புலோமிசை வரவைத்தெரிந்த இந்திரனும் தன்னை அறியாத ஸந்தோஷப்பெருக்கினோடும் விழிகளிக்க அவளைப்பார்த்துப் பெண்ணரசே! நமதையன் கிருபையினால் நாம் சவுக்கியத்திலிருக்கும் நாள் நேர்ந்தது. இனி மனச்சஞ்சலங்களைப் போக்கியிருக்கக் கடவையென்று வார்த்தையாடிப் பின் தவமுயற்சியிற் பெற்றெடுத்த தெய்வயானை அம்மனிடத்திற் கொஞ்சிச் சுபகரவார்த்தையாடி அவர்களை விட்டு விஷ்ணுவாதியரிடம்போய் அவர்கள் யாவரும் ஒருங்குசேர்ந்துவரச் சிவகுமாரன் திருச்சபை சேர்ந்து அறுமுகவனைப்பணிந்து போற்றி இந்திரன் விண்ணப்பஞ் செய்கின்றான்: அப்பனே! எங்களனைவோரையும் மனமகிழ்ச்சியுடனிருக்கக் கடாக்ஷித்த தீனதயாளனே! அடியேன் விரதபலத்தினாற் புத்திரியாகப் பெற்றிருக்கின்ற தெய்வகுஞ்சரியைத் தேவரீருக்குத் திருக்கல்யாணஞ்செய்து கொடுக்க விருப்புற்றேன். அந்த வரத்தைக் கடாக்ஷிக்கவேண்டுமெனப் பிரார்த்தித்து நின்ற காலையிற், குமரக்கடவுளானவர் தேவராஜனுடைய பக்திக்கிரங்கி ஓ!இந்திரனே! முன்

அப்பெண் கொடியானவள் நம்மைத்திருக்கல்யாணம் செய்யும்பொருட்டுநம்மைக்குறித்து அரியதவ விரதங்களைச்செய்திருக்கின்றனள். இப்போது நம்மைக்குறித்திருக்கும் இரண்டு பெண்களுடைய வேண்டுகோளை யுத்தேசித்து நாம் அவர்கள் பால் அப்பேற்றினைக் கடாக்ஷித்திருக்கின்றோம். ஆதலால் நாளைக்கே உனது கருத்தின்படிக்குத் திருமணவினையை முடிக்கும் முயற்சிகளைச் செய்யக்கடவாயெனத் திருவாய் மலர்ந்தனர். அதைக்கேட்ட இந்திரன் மனம் பூரித்துக் கந்தசுவாமியினிடம் விடைபெற்று வந்து சாரணர்களைக் கூவி ஓ' தூதர்களே! நமது திருக்குமாரத்தியைப் பாலசுப்பிரமணிய சுவாமியாருக்கு நாளையத்தினம் பாணிக்கிரஹணஞ்செய்து கொடுக்கவிருப்பதால், நீங்கள் தீவிரமாய்த் திரிமூர்த்திகளுக்கும் முதன்மை பெற்ற சிவபிரானிடத்திலும், முசுகுந்தச் சக்கிரவர்த்தியினிடத்திலும், மற்ற வரசர், குறுநில மன்னர், பிராமண சிரேஷ்டர், தவத்தர், தேவரினங்கள், திக்குப்பாலகர், சத்தரிஷிகள், முதலான திரிலோகங்களிலுள்ள அனைவர்களிடத்திலும் இச்சுபச்சமாசாரத்தைத் தெரிவித்து அவர்களைப் பெண்டுபிள்ளைகள் முதலானவர்களுடன் இக்குன்றிற்கு வந்து சேரும்படிக்கு நாம் வேண்டிக்கொண்டதாகச் சொல்லிவரக் கடவீர்களெனக்கட்டளையிட்டனுப்பிப், பின் மயனைத்தருவித்து மணத்திற்குத்தக்க கல்யாணமண்டபம், வருபவருக்கு விடுதிகளாதிய சகலவளங்களையும் நிருமிக்கக்கட்டளை யிட்டனன். தேவதச்சன் அவ்விதமே அவைகள் யாவற்றையும் மனப்பூரிப்புடன் குறைவின்றிச்செய்து முடித்தனன். மகபதியானவன் அவைகளைக் கண்டுகளித்துத் தக்ஷணத்தில் வானகங்கை ஓமத்திரவியங்கள் முதலியவைகளையும் இன்னம் கல்யாணச்சடங்கிற்கு வேண்டிய சகல அலங்காரங்களையும் சித்தப்படுத்திக்கொண்டிருந்தனன். இவை நிற்க, நாம் முன் குறித்த முசுகுந்தச் சக்கிரவர்த்தியினுடைய வரலாற்றைச் சிறிது எடுத்துரைப்பாம்.

"முசுகுந்தன் சரித்திரம்"

பரமேஸ்வரனும் பார்வதியும் திருக்கயிலாயத்தின்சாரலில் உல்லாசமாக உலவிவந்து ஓர் வில்வமரத்தடியிற் சந்தோஷ வார்த்தைகளாடிக்கொண்டிருக்குஞ் சமயத்தில், அம்மரக்கிளைகளில் உண்டாயிருந்த பலமுசுக் கூட்டங்களிலொன்று முன்னைய நல்வினைப்பயனால் வில்வ

ப்பத்திரங்களைப் பறித்து அம்மையப்பர் சிரங்களில் இடைவிடாமற் போட்டுக்கீச்சுக்கீச்செனக் கத்திப் பற்கள் விளங்க நகைத்துக் களித்திருந்தது. அதுதரும் உபத்திரவத்திற்குப்பரமேஸ்வரி சகியாமற் கோபித்துப்பார்த்தபோது, சிவபிரான் ஓ! நாயகி! நம்மிடத்திற் பிரீதியுடன் அருச்சனைநடாத்திவரும் முசுக்களுக்கரசின்மீதுகோபிப்பார்களோவென்று அதிகப்பட்சத்துடன் அம்முசுவின்மையலை ஒழித்துக்கிருபாநேக்கம் பாலித்த மாத்திரத்தில், அதற்கு ஞானமுண்டாகித் துரிதமாய் அன்னை அப்பரை வலம்வந்து, தான் செய்தகுற்றத்தை மன்னிக்கப் பிரார்த்தித்தது. பகவான், நீசெய்தது குற்றமாக மாட்டாதென்று அந்த முசுவைப்பிரியமாகப் பார்த்து, நீநம்மிருவரையும் அர்ச்சனைசெய்தபடியாற் பூமண்டலமுழுமைக்கும் சக்கிரவர்த்தியா யிருக்கக்கடவையெனத் திருவாய்மலர்ந்தருளினர். அறிவு பெற்றிருந்த மூசானது, ஓ! விஸ்வநாதனே, அடியேன் தமது திருவடிச்சேவையையே இச்சித்திருக்கின்றேனென விண்ணப்பஞ் செய்ய, முசுவினிடத்திற் கயிலாசபதி கிருபைகூர்ந்து, நமது வாக்கியம் பொய்ப்படாதாகையாற் சிலகாலம் நீ சக்கிரவர்த்தியாயிருந்து பின் நம்மைச்சேர்ந்து மகிழ்ந்திருக்கக்கடவையெனத் திருவாய்மலர்ந்தனர். முசுவானது, தேகம்பூரித்து விடைபெற்று அச்சோலையைக்கடந்து பூமண்டலத்திற்கு வந்து மனுச்சக்கிரவர்த்தியின் மரபிற் சத்தியத்தைக் கைவிடாத அரிச்சந்திரனென்பவனின் சகோதரியாகிய மங்கலவதியென்னும் பட்டத்துத்தேவிக்கு முசுமுகத்துடன் சுந்தரமானிட தேகத்தைப் பெற்றுப் பிறந்து வளர்ந்து, முசுகுந்தச் சக்கிரவர்த்தியென்னுந் திருநாமத்துடன் கருவூரை இராஜதானியாகக்கொண்டு, சூரபதுமன் ஆணைக்கடங்கித் தருமபரிபாலனங்களைத்தாழ்வற நடத்தி ஆண்டுகொண்டு வந்தனன். பாலசுப்பிரமணியதேவர், சூரனை வம்சநாசப்படுத்தியதை முன்னமே இந்தச்சக்கிரவர்த்தி தெரிந்து, தனது சகல துன்பங்களையும் போக்கி மகிழ்ந்திருந்தனன். இவை நிற்க, இந்திரனால் அனுப்பப்பட்டிருந்த தூதர்கள் மகோற்சவத்தை ஒருவரொழியாமல் தேடித் தெரிவித்த பிரகாரம், அவர்கள் அனைவோரும் ஒரு முகத்தில் திருப்பரங்குன்றத்திற் கூடி, இடம்பெறாமல் அதன்பேரிலும் மற்றவிடங்களினும் நெருக்குறத்தங்கிக்கல்யாண மகோற்சவத்தை யெதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"அம்மையை அலங்கரித்தல்."

அப்போது ஸ்ரீமகாலெட்சுமியும் சரஸ்வதியும் அரம்பாஸ்திரீகள் முதலியோர் சூழ,இந்திராணி வாசஞ்செய்யும் தலத்திற்சேர்ந்து தெய்வயானை அம்மையைக்கண்குளிரக்கண்டு சேவித்து ஏ! அம்மணீ! நீவெற்றிவேலாயுதக் கடவுளுக்குத் தேவியாயிருக்கின்றதால் எவ்வுலகங்களுக்கும் இறைவியாவாயென, அந்த அம்மனைச் சூழ்ந்துகொண்டு இயற்கையாயிருக்கின்றஅழகிற்குச் செயற்கையினாற் சிலகோலங்களை அலங்கரிக்க விருப்புற்று, அவ்வம்மையின் கூந்தலிற் சுகந்தத்தயிலங்களைத் தடவி,வானகங்கையினாலும் பன்னீரினாலும் திருமஞ்சனமாட்டி,வெள்ளை வஸ்திரத்தைக்கொண்டு ஈரந்துடைத்துத், தெய்வீகம் பொருந்திய பீதாம்பரத்தை மெல்லிய விடையினிடத்தில் உடுத்தி, நறும்புகை ஊட்டிக் கூந்தலையுலர்த்தி, நாயகியார் அளகபாரத்தைப் பொற்சீப்பினாற் சிக்கறுத்துச் சீர்ப்படுத்திப் பின்னலிட்டு, அதிற் புஷ்பங்களை அழகுறச்சொருகி, விழியிமைகளினும் புருவங்களிடத்தும் மையையிட்டு, நெற்றியிற் சாந்துப்பொட்டிட்டு, அதின்மேற் சுட்டியைத்தொங்கவிட்டுச், சந்திரப்பிறை சூரியப்பிறை அரசிலைத்தொங்கல் சடையணிவிதங்களை அளகபாரத்தைச் சூழ்வரத்தரித்து, வயிரக்குழைகளைத் தொங்கட்டங்களுடன் செவிகளிற்பூட்டிக், கழுத்தில் முத்தாரம் சரப்பளி மோகனமாலை மதாணிப்பதக்கம் காறைவிதங்களைத் தரித்துத், தோள்களிற் புயவணிகளைச் சேர்த்துக், கரங்களில் வயிரவளைகள் கங்கண விதங்களைச்சாற்றி,விரல்கள்தோறும் மோதிரங்களைத் தரித்துத், தங்கக்கலசத்தைப் பழித்துத்தேமற் பரந்துததும்பியிருக்கும் கொங்கைகளின்மீது கலவைகளைப்பூசிச் சிந்தூரத் தொய்யலெழுதிச் சொர்ணப்பட்டுக்கச் சணிந்து, பஞ்சதருமலர்களினாற் சோடித்திருக்கின்ற தண்டமாலையைச்சாத்தி, அம்மையின் பாதாரவிந்தங்களிற் செம்பஞ்சுக்குழம்பிட்டுச் சித்திரங்களையெழுதிப் பொற்பாடகம் சதங்கைதண்டை இவைகளைச்சூடி, விரல்கள்தோறும் மோதிரம் பீலிமுதலிய அலங்காரங்களைப் பூட்டி, இவ்விதங்களில் அழகுக்கரசியாக விருக்கின்ற தெய்வ நாயகியாருக்குச்சிங்காரங்களை மனப்பூர்வமாகச் செய்து முற்றியவுடன் அன்னையாரைச் சோடித்துள்ள பீடத்தில் எழுந்தருளச்செய்து, திருஷ்டிப்பரிகாரமாக அஞ்சுநிற அவிகளைச் சுற்றி நாற்புறங்களிலும் வீசி ஆலஞ்சுற்றி முடித்துப், பூரண சந்திரனைச் சூழ விருந்த நக்ஷத்திர

களைப்போலக் கல்யாணப்பெண்ணை வளைந்துகொண்டு சுபசோபனங்களைப்பாடி மகிழ்ந்திருந்தனர்.

"பாலசுப்பிரமணிய தேவரை மணச்சாலைக்கு அழைத்து வருதல்"

அப்போது தேவராஜன் வேண்டுபவைகள் அனைத்தையும் பூர்த்திசெய்து கொண்டு பிரமனை வணங்கிச் சுவாமீ! திருமணத்திற்கு யோக்கியமாகிய முகூர்த்தகாலத்தை ஆராய்ந்து சொல்ல வேண்டுமெனப்பிரார்த்திக்கப்,பிரமன் நகைத்துச் சுயஞ்சோதிக் கடவுளுக்கு ஒரு வேளையைக்குறிக்கவும் வேண்டுமோ! எக்காலமும் நன்மையாகவே இருக்கும், ஆயினும் ஆராயுமிடத்தில் இத்தினம் மிகவும் சுபகரமாயிருக்கின்றது, துரிதமாய் நடப்பிக்கலாமென்று இந்திரனுடன் தேவர்களனைவரும் சென்று முசுகுந்தச் சக்கிரவர்த்தி முதலிய சகலருஞ் சூழ்ந்து போற்றச்சிங்காசனத்தில் விளங்கியிருக்கும் சரவணபவனைத்தெரிசித்து வணங்கிப்,பிரமனுனவன் தேவாதி தேவனே! திருமணப்பந்தருக்கு எழுந்தருள வேண்டுமெனப் பிரார்த்தித்தனன். சிவகுமாரன் நகைமுகராய் உங்கள் எண்ணப்படிக்கு நடத்தக் கடவீர்களென்று யாவரும் தம்மைப் போற்றிச் சூழ்ந்து வரச் சகலவாத்தியகோஷங்களுடன் தமது மயில்வாகனத்தி லாரோகணித்து விசாலமாகிய பலதெருக்களைக் கடந்து கலியாணச்சாலை முகவாயிலினிடத்தில் வரும்போது பூரணகும்பங்களைத் தவத்தரும் பிராமண சிரேஷ்டரும் கரங்களிலேந்தி மந்திரங்களைச் செபித்துத் தீர்த்தத்தை எம்து கர்த்தன் மீதிற் புரோட்சித்து வாழி! வாழி! என ஆசி கூறினர். அரம்பையர், ஆலங்களை யேந்திச் சோபனங்களையும், நாகக்கன்னியர், கற்பூரமேந்திச் சுபங்களையும் பாடினர். மணக்கோலம் பூண்ட எமதையன் இவ்விதங்களாக மயில்வாகனத்தை விட்டிறங் கியவுடன் இந்திராணியானவள் தன்கரங்களைக் கூப்பிக்கொண்டு தன் கணவன் கட்டளையின் படிக்கு நடந்து வந்து பொற் பள்ளையத்திற் சரவணபவன் திருவடிகளைச் சேர்த்து ஆவின் புதியபாலினுற் கழுவிமுன்றுனையால் ஈரத்தைப்போக்கிச் சந்தனக் காப் பிட்டுச் சுகந்த கற்பகமலர்களைச் சொரிந்து தாபதீபங்களைக் காட்டித் தேகப்பரவசத்தளாய் மகிழ்ந்து வணங்கி

ஆலத்தை மும்முறை குமாரதேவர் திருமுன்பு சுழற்றி நாணத்துடன் தேவகன்னியர் சூழத் தன் னிருப்பிடம் சேர்ந்தனள்.

சிவகுமாரன், இந்திராணியிடத்திற் கிருபானோக்கம் பாலித்து, மகாவிஷ்ணு பிரமனுடைய கரங்களைப் பற்றிக்கொண்டு பிரகாசித்திருக்கும் கல்யாணமண்டபத்திற்சென்று,யாவரும் "ஜெய ஜெய" "ஜெய ஜெய" வெனப்போற்றச் சிங்காதனத்தில் எழுந்தருளியிருந்தகாலத்திற் சரவணபவன் கட்டளைப்படிக்குயாவரும்தங்கள் தங்கள் ஆசனங்களில் அமர்ந்து மகிழ்ந்திருந்தனர். அப்போது இந்தத் திருக்கல்யாணவைபவங்களைப் பரமேசுரன் திருவுள்ளத்தில் அறிந்து,பராசத்தியுடன்சிவகணங்கள் முதலியோர் சூழத் தமது திருக்கயிலையைவிட்டு வானவழியாகத் திருப்பரங்கிரிக்கு நேராகவருவதனை அறிந்த குமாரசுவாமியானவர், தக்ஷணத்தில் சிங்காதனத்தைவிட்டிறங்கி யெதிர்கொண்டு, விமானத்தை விட்டிறங்கிச் சமீபித்துவரும் தமது தாய்தந்தையரை அதிக ஆவலுடன் சேர்ந்து தீர்க்கதண்டஞ்செய்தெழுந்து பன்னிருகரங்களையுங்கூப்பிக்கொண்டு துதித்துநிற்க, அம்மையும் அப்பரும் தமது ஒப்பற்ற திருக்குமாரனிடத்திற் பரிபூரணகடாக்ஷம் பாலித்து அவரைப் பெருமகிழ்ச்சியுடன் தழுவிக்கொண்டு பக்கங்களிற் போற்றி நிற்கும் மற்ற அனைவோர்களிடத்தினும் அருட்பெருக்கைச் செய்திருக்குஞ் சமயத்தில், எமது வடிவேலர் பிதாவை அன்னையுடன் கல்யாணமண்டபத்திற் கழைத்து வருவதாயினர். அத்தருணத்திற், பரமன் திருவுள்ளப்படிக்குச் சூரியனைபோலப் பிரகாசமாயுள்ள ஓர் விமானம் வந்திறங்கியது. அதிற் குமாரதேவர் நடுவிலும் பார்வதிபரமேஸ்வரர் அவ்ருடையஇருபக்கங்களிலும்விளங்கவீற்றிருந்தகாட்சியைத்தேவர்களும் மற்றவர்களுந் தெரிசித்துக்களித்தனர். அப்போது பிரமன் ஓ! லோகநாயகனே! அடியோங்கள் மானபங்கப்பட்டுச் சிறுமைகளையடைந்து வருந்தியதற்கிரங்கிப் பாலசுப்பிரமணிய தேவனைப் படைத்தருளினீர். அத்திருக்குமாரரானவர் சூரனை வம்சநாசமறக் கொன்றொழித்துச் சயந்தன் முதலியோர் சிறையையும் மீட்டு இத்தலத்திற் கெழுந்தருளி யிருக்கின்றனர். இந்நன்றிக்குத் தக்க கைம்மாறு ஒன்று மில்லாமற் போனபோதிலும் யாங்கள் இக்காலத்திற் பெற்ற ஸந்தோஷத்திற்காகத் தேவேந்திரன் தவத்திற்பெற்ற பெண்கொடியை இத்தினம் பாலசுப்பிரமணியக் கடவுளுக்குத் திருக்கல்யாணஞ்செ

ய்து கொடுக்க யெத்தனித்து, அதற்கமைத்த முயற்சிகளை இதோ நிறை வேற்றி யிருக்கின்றோமாகையால், ஐயனே! அதற்குச் செலவு கொடுத் தனுப்ப வேண்டுமென்று பிரார்த்திக்கச், சிவபிரான் நகை முகராய்ப் பிரமனைநோக்கி, நீங்கள் எத்தனித்த சுபகாரியம் நன்மையாக விருக்கி ன்றதால் இச்சம்பிரமத்தைப் பார்த்துப்போக நாமும் உமையுடன் இவ்விடம் வந்தனம் துரிதமாய் முகூர்த்தத்தை நடத்தலா மெனத் திருவாய்மலர்ந்தனர். உடனே பிரமனால் தூண்டப்பட்ட இந்தி ரன் அதிக சந்தோஷத்தோடும் தன் விடுதியைச் சேர்ந்து தேவகன்னி யர் முதலான சுந்தரவதிகள் சோபனங்களைப்பாடிச்சூழ, அதின் மத் தியிற் பிரபையுடன் வீற்றிருக்கும் தன் பெண்ணைக்கிருபையாகப் பார் த்து, என்னைப்பெற்ற தாயே! குலக்கொழுந்தே! யாங்கள் ஈடேறவந்த தவ அமுதே! வருகவருக! என்றழைத்த காலையில் தெய்வகுஞ்சரி யார் அதிக ஸந்தோஷத்துடன் பீடத்தை விட்டெழுந்து திருவடிச் சிலம்பு சப்திக்கப்பாதங்களை மிருதுவாகப் பெயர்த்துவைத்து ஸ்ரீமகா லெட்சுமி சரஸ்வதி கரங்களைக் கைலாகுகொண்டு தேவகன்னியர் சுப ங்களைப் பாடிவர எதிரில் நிற்கின்ற பிதாவின் அருகில் வந்த மாத்திர த்தில் அவன் முகத்துடன் முகத்தைச்சேர்த்து முத்தமிட்டுஅவளைத் திருமணச்சாலைக்கு அழைத்து வந்தனன். அப்போது தேவர்கள் கற் பகமலர்களைச்சொரிந்து பணியவும், தவசிரேஷ்டர்கள் அட்சதைகளை இறைத்துத் தாயே! வாழி! வாழி! என்று ஆசிகளைச்சொல்லி வணங்க வும், சபையோர்கள் "ஜெயஜெய" வென்றேத்தித்தொழவும், இவ்விதக் களியாடல்களுடன் வந்த தெய்வகுஞ்சரியார், எதிரிலிருந்த அணையில் வீற்றிருக்கின்ற உலக மாதாவையும் ஆதிதேவனையும் தெரிசித்தவுடன் அருகிற் போய் அவர்களது பாதகமலங்களிற் பணிந்து மத்தியிற் சுயம் பிரகாசமாய் விளங்கும் வெற்றிவேலாயுத மூர்த்தியைப் பார்த்தவுடன் பெண்ணரசியானவள் நாணந்தலைக்கொண்டு வெட்கி அன்னத்தை யொப்பப் பக்கதில் ஒதுங்கினள். அத்தருணத்திற் சிவபிரான் தம்மை வணங்கிய மருகியிடத்திற் கிருபாநோக்கம் பாலித்தனர். பார்வதியா ரும் தமது திருக்கரத்தை நீட்டிமருமகளைச் சேர்த்தணைத்துப் பக்கத் திலிருக்கின்ற திருக்குமாரனையும் மற்றொரு கரத்தினால் அணைத்துச் சென்று, இருவரையும் எதிரிலிருக்கும் பீடத்தில் உட்காரவைத்து ஆசீர்வதித்துத் தமதிருப்பிடம் வந்தனள். கல்யாணப்பெண்ணும் மாப் பிள்ளையும் ஒருமைப்பட வீற்றிருந்த காட்சியானது, சிவபிரான் பராசு

த்திசமேதராய் எழுந்தருளிய தோற்றத்தை ஒப்பக்காட்டியது. அக்கோலத்தை விஷ்ணுவாதி தேவர்களும் மற்றவர்களும் கண்டு போற்றி ஆனந்தப் பரவசராயிருந்தனர். அம்மையப்பரும் மனப் பூரிப்புடன் மங்களவாசிகளைக் கூறினர். இந்திரன் தன்தேவியையெச்சரிக்க, அவள் திருமஞ்சனம் கற்பகமலர் தூபதீப முதலிய வஸ்துக்களுடன் தன் கணவன் பக்கத்தில் வந்து நின்றனள்.

"மணச்சடங்கு"

அக்காலத்திற் பிரமன் பணித்தபடிக்குத் தேவராஜன் தன் திருத்தேவியுடன் குமாரதேவருடைய சந்நிதானத்திற்போய் வேதவிதிப்படிக்குப் பாதபூசையைச் செய்யத் தொடங்கினவனாய்ப் பொற்றட்டினிடத்தில் ஐயன் திருவடிகளைச் சேர்த்துப் தன் தேவியானவள் நாணமிகுதியினால் தலையைக்கவிழ்ந்தபடி பொற்கலசமதூரகங்காதீர்த்தத்தை மெல்லச் சொரிந்துவரச் சுத்தி செய்து தனது உத்தரியத்தினால் ஈரத்தைப்புலர்த்திக் களபகஸ்தூரிக்குழம்பை அப்பிப் பஞ்ச தருக்களினது புதிய மலர்களைக்கொண்டு அர்ச்சித்துச் சாம்பிராணித் தூபத்தைக் காட்டிக் கற்பூர நிராஞ்சனம் கொடுத்துச் சோடசவுபசாரங்களுடன் பூஜையை நிரப்பியவுடன், தேவராஜன் மனப்பூரிப்போடு பாலசுப்பிரமணியக் கடவுளினது திருக்கரங்களில் தெய்வநாயகியாரின் அஸ்தங்களைச் சேர்த்து, இந்த அருமைப் பெண்ணரசியைத் தமக்குத் திருத்தேவியாகக் கொடுத்தனன், அங்கீகரித்து அன்பாய் ஆண்டு இரட்சிப்பது உமதுகடனெனவேண்டி, இந்திராணிவிட்ட வானநதிப்புனலினால் தாராதத்தஞ் செய்து வணங்கினான். (இந்தச் சரித்திரத்தைப் பக்தியாகக் கவனித்து வரும் நமது நண்பர்களே! தமது திருவடிகளுக்கு அன்பு பூண்டவர்களுக்கு இகபரசெல்வங்களைக் கடாக்ஷித்துச் சாரூபபதவியையும் தந்தாளவல்ல சரவணபவன், தேவராஜன் தன் குமாரத்தியைத் தாரைவார்த்துக் கொடுக்க மனமகிழ்ச்சியுடன் ஏற்றனனெனில், அவன் திருவிளையாடல்களின் பெருமிதங்களையாவராற்கணித்துப் புகழக்கூடும்!) இவைநிற்கப் பிரமதேவன் எழுந்து மானசத்தினால் நியமித்த மங்கிலியத்தைத் தேவப்பிராமணர்கள் ஆசிகளைச்சொல்லி வேதங்களை ஓதத்தக்கதாகச் சிவசுப்பிரமணியக் கடவுளினது திருக்கரத்திற் கொடுத்தவுடன், குமாரதேவர் அதன் சூத்திரங்

களை இருகரங்களினுற்பற்றிக் "கணகண" எனத்தேவதுந்துமிகள் முழங்கவும் வேதாகமங்கள் துதித்து வாழ்த்தவும் அந்தத் திருமங்கிலியத்தை எமதன்னையாரின் திருக்கழுத்தில் தரித்து மும் முடிபோட்டுத் திவ்ய மலர் மாலை ஒன்றையெடுத்துத் தமது திருத்தேவியாரின் சிரத்துக்கணியாகத் தரித்தனர். அச்சுப காலத்தில் தேவேந்திரன் தன் இஷ்டசித்தியைப் பெற்றுக் களித்தவனுய்ப் பலவர்க்கம் முதலிய சிறந்த வஸ்துக்களைத் தருவித்துத் தங்கப்பள்ளயங்களில் நிரப்பிச் சண்முகப்பெருமான் திருமுன்பு வைத்துத்,தேவரீர் இவைகளைப்புசித்து அடியேனை இரட்சிக்கவேண்டுமென நிவேதித்தனன். அக்காலையில் மங்களவாத்தியங்கள் அண்டங்கள் அதிர்ந்து திசைகள் செவிடுபடத் "தாம் தாம்" என்று முழங்கின. சகலரும் அந்தமணக்கோலத்தை விழிகளும் மனங்களும் களிக்கத் தரிசித்துச் சந்தோஷசாகரத்தில் மூழ்கினவர்களாய், இத்தினம் ஜென்மசாபல்யரானுேமென்று பலவிதங்களில் துதித்திருக்கும்போது, பிரமதேவன் ஓமங்கள் முதலியகருமங்களை முடித்து அத்தீயிலிருந்தெடுத்த மையை மாப்பிள்ளையைக்கொண்டு பெண்ணின் திருநுதலில் இடுவித்தான். பின்பு மகா விஷ்ணு, அறுமுகவனைப் பீடத்திலிருந்தெழுப்ப மகாலெட்சுமியும் தெய்வநாயகியாரைக் கிளப்பிச் சுவாமியினுடைய திருக்கரத்தை நாயகியார் பிடித்துக்கொண்ட பிரகாரம் தீக்குண்டத்தை மும்முறை வலம்வரச்செய்து அவர்கள் வடபாரிசத்தைச் சேர்ந்தவுடன் பாலசுப்பிரமணியதேவர் தமது மனைவியின் திருப்பாதத்தைக் கரத்தினுற் பற்றியெடுத்துஅம்மியின் மீதில்வைக்க,முருகப்பெருமானுக்கும் அம்மைக்கும் வானத்தின் அருந்ததியைக்காட்டி இவ்விதமாக யாவருடைய சாட்சியாகவும் திருக்கல்யாணம் கிரமமாக முடிந்தவுடன் பெண்ணும் மாப்பிள்ளையும் உமாபரமேஸ்வரரை மும்முறை வலம்வந்து சேவித்தனர். பரமனும் பராபரையும் மனமகிழ்ந்து பல ஆசிகளைச்சொல்லித் தம்பதிகளை இன்று முதல் நமக்கிருக்கின்ற முத்தன்மைகளையும் நீங்களிருவரும் பெற்றுச் சகலராலும் பூசித்து வணங்கப்பட்டு என்றும் மங்களமாய் வாழ்ந்திருப்பீர்களென வாழ்த்தினர். அதைக்கண்ட சகலரும் சண்முகநாதனையும் தெய்வநாயகியாரையும் முன்னிலும் அதிகப்பக்தியுடன் தங்கள் இஷ்டதேவதைகளாகக்கொண்டு அவரவர்கள் தம் தேவியருடன் மும்முறை வலம்வந்து வந்தனைவழி பாடுகளைச்

...ச், சிவகுமாரன் அவர்களிடத்திற் பரிபூரணகடாக்ஷம் பாலித்தனர். தமது திருக்குமாரனுக்கு நடக்துவரும் சிறப்புகளைக் கண்டு மனமகிழ்ச்சியுடன் உமாபரமேஸ்வரர் அத்திருச்சபையை விட்டு யதாப்பிரகாரம் தமது திருக்கயிலாயத்தைச் சேர்ந்திருந்தனர். லோகநாயகன் திருத்தேவியுடன் சென்றதை அனைவரும் தெரிந்தவுடன், மாதாபிதாவைப் பிரிந்த புத்திரரைப்போல மனம் வருந்திப், பின் அந்த அம்மை அப்பரைத் திரும்பக்கண்டு களிப்பவரைப் போலச் சிங்காதனத்தில் வீற்றிருக்கின்ற குமாரதேவரைத் தெய்வானைப் பிராட்டியாருடன் தெரிசிக்க, அவர்கள் உமாபரமேஸ்வரர் கோலமாகவே அவர்களுக்கு தோற்றக்கண்டு அதிசயித்து ஆனந்தப்பரவசராய் மனக்கவலைகளைப் போக்கிச் சரவணபவன் சுயஞ்சோதிப் படிவத்தைக் காணுந்தோறும் பேரானந்தக் கூத்தாடிப் பலவிதங்களில் அவன் பெருமைகளைப் பாடி வழுத்துவதாயினர். அப்பாற் சண்முகப்பெருமாள் தமது பிரியதேவியுடன் அரியணையை விட்டிறங்கிச் சகலசம்பிரமங்களுடன் தமது திருக்கோவிலிற் பிரவேசித்து மகாவிஷ்ணு பிரமன் இந்திரன் மற்றுமுண்டானவர்கள் யாவருக்கும் கிருபைசெய்து, தத்தமது பதவிகளுக்கு அவர்கள் போவதாகச்செலவு கொடுத்தனுப்பி விட்டுச், தம் பரிசனரை வாயில்கள் தோறுமிருந்து போற்றிவரக் கட்டளையிட்டு, அடியேனையீன்றெடுத்த அன்னையுடனே அந்தப் புரத்தைச்சேர்ந்து, சராசரப்பிரபஞ்சங்கள் தழைத்தோங்கும் படிக்குப்பள்ளியறையிற், பஞ்சணைமெத்தைகளை விரித்து அவைகளில் மலர்ப்பாயலைப் பரப்பி மற்ற விசேஷங்களுடனும் சோடித்திருக்கின்ற பொன்மஞ்சத்தில் எழுந்தருளித், தேவியுந் தாமும் சரசசல்லாபங்களைச் செய்து சுரதலீலைகளினல் இன்ப நலங்களை அனுபவித்துக் களித்திருந்தனர். மகாவிஷ்ணு பிரமனாதியதேவர்கள் தங்கள் தங்கள் நகரங்களிற் சேர்ந்து மனவெழுச்சியுடனிருந்தனர். தேவேந்திரன் அதிகஸந்தோஷத்துடன் முசுகுந்தச்சக்கிரவர்த்தி முதலியவர்களை உபசரித்துப் பல உபசாரவார்த்தைகளைச் சொல்லி அவர்களெல்லாருக்கும் செலவு கொடுத்தனுப்பிப் பின் மனதிற் கினிய இந்திராணியுடன் போக போக்கியங்களை அனுபவித்துக் கொண்டு சயந்தனுடன் சிலதினம் அத்தலத்திற் பலதேவர்கள் தனக்குப் பணிவிடைகளைச் செய்துவர வாசமா யிருந்தனன்.

"விண்குடி யேற்றல்"

அப்பால் ஒருதினம் பாலசுப்பிரமணியக்கடவுள் இந்திரனைப்பழயபடிக்குப் பொன்னுலகத்திற் பட்டாபிஷேகஞ் செய்து வைக்கத் திருவுள்ளத்திலெண்ணி அக்கருத்தைத்தம் தேவிக்குத் தெரிவித்துத் தம்பதி சகிதராய் அந்தப்புரத்தைக்கடந்து சபாமண்டபத்திற்கு வந்து,வீரவாகுதேவர் முதலானவர்கள் போற்றிச் சூழ வீற்றிருந்தகாலையில் இந்திரன் மனவுற்சாகத்துடன் விரைவில் வந்து கர்த்தனைப்பணிந்து நிற்கக்குமாரதேவர் அவனிடத்திற்கிருபைகூர்ந்து தேவராஜனே! இத்தினம் தேவலோகவாழ்வை உங்களுக்குப் பழயபடிக்குத் தருவோமெனத் திருவாய்மலர்ந்து, வந்தடைந்த மகாவிஷ்ணு பிரமன் முதலான சகலதேவர்களையும் தங்கள் தங்கள் வாகனங்களிலேறி வரக்கட்டளையிட்டுத் தாம் வாயுதேவனாற் கொண்டுவரப்பட்ட இரதத்திற் பிராட்டியாருடன் எழுந்தருளி வானவழியாக, முன்பானுகோபனாற் சுட்டெரிக்கப்பட்ட பொன்னுலகைச் சேர்ந்து, தேவசிற்பியால் அதை முன்னிலும் அதிகவளங்களுற அமைக்கச்செய்து, தேவேந்திரனைச் சபாமண்டபத்திற் சிம்மாசனாதிபதியாக வீற்றிருக்கச் செய்து, பிரமனைக்கொண்டு அவனுக்கு மவுலிசூட்டும் படிக்குச்செய்து, தேவர்கள் யாவரும் அவனைப்போற்றிக்களிக்கச்செய்த சமயத்தில் இந்திரன் தனது சிம்மாசனத்தை விட்டெழுந்து வந்து குமாரதேவரின் சரணாரவிந்தங்களிற் பன்முறைபணிந்தெழுந்து பலவாறாகப் போற்றிநின்றனன். சண்முகசுந்தரன் ஓ! தேவராஜனே! இனி எக்காலமும்மனமகிழ்ச்சியுடன் திரிலோகாதிபதியாய் முன்போற் சகலரும் போற்றிவணங்க அரசுசெலுத்தி யிருப்பாயெனக் கடாக்ஷித்துத் தமக்கு அவ்வுலகத்தில் அமைத்துள்ள திருமாளிகையிற் சேர்ந்து விஷ்ணுவாதியருக்குச் செலவுகொடுத்தனுப்பித் தெய்வநாயகியாருடன் அந்தப்புரஞ்சென்று லீலாவினோதங்களை அனுபவித்துக் கொண்டிருந்தனர்.

"கந்த வெற்படைதல்"

இவ்விதம் சகலரும் சவுக்கியத்தி லிருக்கின்றபோது, ஒருநாள் வெற்றிவேலாயுத மூர்த்தியானவர் அந்தப்புரத்தை விட்டுத் திருச்சபையில் வீற்றிருந்ததனை மகாவிஷ்ணு பிரமனாதியர் போதவுணர்

வில்தெரிந்து, வண்டினங்கள் பூவின்தேனை நோக்கிவருமாறு போல ஆவலுடன் வந்து குமாரதேவரைப் பணிந்து போற்றுகின்றவர் மீது கந்த சுவாமியார் கிருபா நோக்கம் பாலித்து, நாம் இன்றையத்தினம் கந்தமாதனத்தைச்சேர்ந்து அங்கு சிலகாலமிருக்க நினைத்திருக்கின்றோமெனத் திருவாய்மலர்ந்து அவர்களுக்கு விடைகொடுத்தனுப்பித் தாமும் பிராட்டியாரும் வாயுதேவன் கொண்டுவந்த இரதத்தில் ஆரோகணித்துத் தம்துணைவர்முதலிய பூதகணங்களுடன் பொன்னுலகை விட்டுப் பிரயாணப்பட்டுத் திருக்கயிலாயத்தைச் சேர்ந்து தமதுமாதாபிதாக்களைச் சேவித்துத் தமது கருத்தை அவர்களுக்குத் தெரிவித்து அவர்களுடைய ஆசீர்வாதத்தைப்பெற்றுக்கொண்டு வெள்ளியங்கிரிக்கு அடுத்திருக்கின்ற கந்தபருவதத்தில் விளங்கியிருக்கும் ஆலயத்துட் பிரவேசித்துப் பூதகணங்கள் திசாதிசைகளினும் பரந்து காவல் கொண்டிருக்கத் தம்பதிசமேதராக அங்குள்ள சபாமண்டபத்தின் சிங்காதனத்தில் எழுந்தருளி யிருந்தனர்.

"இந்திரபுரி விருத்தாந்தம்"

இவையிற்கப் பொன்னுலகத்தில் அமர்ந்து, தேவகுலகுருவாகிய பிரகஸ்பதி பகவான் மந்திராலோசனைப்படி திரிலோகங்களையும் சகல சிறப்புகளுடன் ஆண்டுவந்த இந்திரனானவன், ஒருநாள்தான் அசுரராற்பட்ட பாடுகளையும் சேவலங்களையும் நினைத்துச் சஞ்சலித்துத்தனது செல்வங்களை அநித்தியமென்று வெறுத்துக் கொண்டு தவவேடம்பூண்டு காட்டிற்குச் சென்று பரமசிவத்தைக் குறித்துத் தவஞ்செய்யும் மனமுடையவனா யிருந்த குறிப்பினைத் தெரிந்த பிரகஸ்பதி பகவானானவர், அஹா! மோசம் வந்தது! இதற்கொரு நிவாரணத்தை நாம்தேடவேண்டுமென ஒருதந்திரத்தை மனதில் தீர்மானித்து இந்திரனுக்கு உலோகாயுத மதத்திற்குரியவிஷயங்களைச் சவிஸ்தாரமாக வெடுத்துப்போதிப்பதாயினர். ஓ! புரந்தரனே! பொறி புலன்களை அடக்கி ஆசையை நீக்கிச் செய்கைகள் அழிந்து வினைக்கூடாகிய தேகவாசனையை நீக்கி நித்தியத்தைத் தரவல்ல பேரின்பவீடொன்றிருக்கின்றதென்றும் சில சபலசித்தர் சொல்வதுண்டு. அதனைக் கண்டவர்களைக் காட்டக்கூடுமோ? இம்மையில் உள்ளங்கை நெல்லிக்கனி போலத் திருஷ்டாந்தமாய் அனுபவித்துக் களிக்கும்போக போக்கியங்களையே

உண்மையாக உலகங்களிற் சாதாரணமாய் வசனித்துக் கொள்ளவேண்டிய தன்றி வேறென்றுண்டா யிருப்பதில்லை. ஆதலால், பொய்க் கானலை நீர் எனக்கருதி அதிலிச்சை கொண்டு கரத்திலகப்பட்ட சிறந்த தேவாமுதத்தைக் கமரிற் கவிழ்த்து மோசம் போனவரைப்போலச் சிலர் நித்திய வீட்டைப்பெறக்கருதி இம்மையிற்பிரத்தியட்சமாய்க் கண்ட பிரயோசனத்தைப் பலோத்காரமாக இழக்கும் படிக்கிருக்கும் உன் எண்ணம் வெகுநேர்த்தியாக விருக்கிறது. ஓ! தேவராஜனே! தன்மனதிற்கினிய சுந்தரமுள்ள மங்கையரை அம்சதூளிகா சயனத்திற் சரசசல்லாபங்களினுற் சுரதலீலைகள் செய்து ரமிக்கும் பெரும்பேரின்பமே மோக்ஷசாம்பிராச்சியமாமென்று இன்னும் மதனசாஸ்திரக் கிரமங்களனைத்தையும் பிரகஸ்பதி பகவான் தேவராஜன் மனமுருகப்பேதித்தெடுத்துப் போதித்தபோது, மகபதியானவன், தான் கொண்டிருந்த பழயவெண்ணங்களை முற்றுந்துறந்து காமவலையிற் சிக்குப்பட்டு மதனசாஸ்திரப் பிரகரணங்களை வேதமொழிகளாக நிச்சயித்துக் கொண்டு, இடைவிடாது பல நாட்கள் இந்திராணியைக் கலந்தனுப வித்திருந்தனன். அத்தருணத்திற் பிரகஸ்பதிபகவானுடைய உதவியைக்கொண்டு இந்திரப் பட்டத்திற்குரிய வயிரமுடியைச் சுமந்து அரசாண்டுவந்த இந்திரகுமாரனனவன், தன்குருவைத்தொழுதுவிஷ்ணுபிரமனுதிதேவர்களும் அளவில்லாத தவசிரேஷ்டர்களும் மற்றைய முனிவர்களும், மிகுந்த தவமகிமை பொருந்தியுள்ள சூரபதுமனுற் கொடிய துன்பங்களைத் தொன்று தொட்டு அனுபவிக்க நேரிட்ட காரணமென்ன? அதனைத் தேவரீர் வரன்முறையாக அடியேனுக்கு அனுக்கிரஹஞ் செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கத் தேவகுருவானவர் சொல்லத் தொடங்கினர்.

5 வது தேவகாண்டம் முற்றிற்று.

உ

வேற்றிவேலுற்ற துணை

6-வது தட்சகாண்டம்.

விருத்தம்.

மாயையின் வலியோனுகி மன்முதலோரை வென்றே
யாயிரத் தோரெட்டண்ட மரசுசெய்துக நூற்றெட்டுக்
காயமதழி வின்றுகிக் கடவுளர்க் கலக்கண்செய்த
தீயசூர் முதலைச்செற்ற குமரன்ருள் சென்னிவைப்பாம்.

"தக்கன் பரத்துவத்தைத் தெளிந்து தவத்தால் வரம்பெறல்"

உலகங்களிற் சிறந்து விளங்கும் சத்தியலோகத்திற் பிரமன் கொலு வீற்றிருக்குஞ் சமயத்தில் அவன் பிள்ளைகளில் ஒருவனுகிய தக்கனென்பவன், பிதாவைநோக்கி, திரி மூர்த்திகளிலும் மூலகாரணக்கடவுளைத் தெளிவிக்க வேண்டுமெனக் கேட்கப், பிரமன் நகைத்துக்குமாரனே! விண்டுவும்யானும் பூர்வத்தில் நாம் நாம் பிரமமென்று அஞ்ஞானப் போரிட்டிருக்கின்ற காலத்தில், அக்கினி வடிவாய் எங்கள் இருவர் மத்தியில்தோன்றி எங்கட்கு நிச்சயந்தெளிவித்த பரமசிவனே மூலகாரணன். இதை நிச்சயமாகக் கொள்ளக் கடவாயென்றருளக் கேட்ட தக்கன், மேலும் பிதாவைநோக்கிச் சகலத்தையும் சங்கரிக்கும் சிவன் உங்களுக்குக் கர்த்தனுகும் காரணமென்னவென வேண்டப் பிரமன், குமாரனே! நீவேதசாஸ்திரங்களைப் பூரணமாக வாசித்தும் பரத்துவ நிச்சயத்தினை அறியாமல் மயங்கினை. அழித்தற்குரிய தொழிலை நடாத்தும் பரமன் முதன்மையாகும் காரணமென்னெனில், என்னையும் கேசவன் முதற்சகலத்தையும் ஊழியிலொடுக்கு கின்றவன் அவன் ஆஞ்ஞையினுலே, முதற் சிருஷ்டிப்பவனும் அவனே ஆவனல்லவோ? மேலும், விண்டுவையும்என்னையும் தமதுபுயங்களில் உண்டாக்கி உலகங்களை அழித்துக்காக்குந்தொழிலை அடியேங்களுக்குக் கட்டளையிட்ட தன்றியும்; உங்களிடத்திற் பிரியாது வாசஞ்செய்வோமென்றருளி அவ்வாறே எங்கள் மூலமாக எறும்பு முதல் யானை ஈருக விளங்கும் பிராணிகளைத் தோற்றுவித்துப் போஷிக்கின்றுன். அவன் அருளிய அழிவில்லாத வேதங்களில் மூலகாரணனுக் குரைத்த உண்மையினை மற்றவருக்கும் உரியனவாகப் பேசுவது உபசாரமாகும். அவ்வாறே மற்றச் சிவராசிகளையும் அவைகளுக்குக் காரணமாகிய பஞ்சபூதங்களையும் வேதம்துதிக்கும். திருஷ்டாந்தமாகப் பிராமணரை யாமெனத் துதிப்பாரும் உளரல்லவோ? யாவராயினும் எவ்வெவரை எவ்விடையங்களில் துதிக்கினும், அது மூலகாரணனை சிவனையே சேரும். அவ்வாறேவேதங்கள் துதிப்பதனைத்தும் சிவபிரானுக்கே உரியதாம். குமாரனே! இவைகளை நீமுன்னமே தெளிந்தும், ஈசன்மாயையிற்பட்டு உழலுகின்றனை. வேதங்கள் சிவனைப் புகழ்ந்ததைப்போல என்னையும் விண்டுவையும் மற்றெவரையும் உண்மையாகத் துதித்த துண்டோ? இதனை

ச்சோதிப்பையாயின் தெளிவடைவாய். அவன் அனுக்கிரஹம் பெரு மல் முத்தி பெற்றவ ரொருவருமில்லை. அவனன்றி வாழ்ந்த தேவரைக் காட்டவல்லமோ? இது சத்தியம். ஆகையாற் குமாரனே! அந்தக்கர்த்தன் பாதகமலங்களிற் சரணமடைந்து வாழக்கடவாயெனப் போதித்தனன். தக்கன் அய்யம் நீங்கித்தன் பிதாவை நோக்கி இனி அவனைக்குறித்துத் தவங்களைச் செய்து இஷ்டகாமியங்களைப் பெறுவேன். அதற்குத் தகுதியாகிய இடமொன்றைக் காட்டி எனக்குச் செலவுதர வேண்டுமெனக் கேட்கப் பிரமன் முன்மனதினுல் தான் சிருஷ்டித்த மானதமடுவின்பெருமைகளைத் தெரிவிக்கத் தக்கன்பிதாவைச்சேவித்து அவ்வாவியின் கரையைச்சேர்ந்து பரமசிவத்தைக் குறித்துப் பதினையிரமாண்டுகள் அகோரதவத்தைச் செய்திருந்தனன். பரமசிவன் அதனைத்திருவுள்ளத்திற் கொண்டு உமையவள் சமேதராய் அவன்முன் எழுந்தருளி வேண்டும் வரங்களைக் கேட்பாயெனத் திருவாய் மலர்ந்தனர். தக்கன் மேலான மோக்ஷத்தை நினையாமல் ஊழ்வசத்தனுய்ச்சுவாமீ! திரிலோகங்களினும் என் ஆணைசெல்லவும், தேவரீரை வந்திப்பவர் அனைவரும் என்னைப்பணிந்து போற்றவும், உம்மையல்லது மற்றத் தேவதைகளை மனதினும் கருதாமலும், விண்டுவாதியர் அடியேன் கட்டளையில் அடங்கி நடக்கவும், மனதிற்கினிய புத்திரரைப்பெறவும், அகண்ட சாம்பிராச்சிய செல்வங்களை அடையவும், அழிவில்லாத நித்தியத்துடன் எக்காலமுங் களித்திருக்கவும், கடாக்ஷிக்க வேண்டும். இஃதன்றியும், உமது இடப்பாகத் தமர்ந்த பராசத்தியார் என்பெண்ணுகவும், நீர்பிராமணவடிவா யெழுந்தருளி அவளை மணஞ்செய்யவும் வேண்டுமென விண்ணப்பஞ் செய்ய, பரமேஸ்வரன் மகிழ்த்து உன் கருத்தின்படியே தந்தோம். ஆனல், உன்மனம் நமது மெய்ப்பத்தியில் திரியுமாயின் நமது வரமும் இரியுமென்றருளித் தம திருப்பிடஞ் சேர்ந்தனர்.

"தக்கன் அரசும், பிள்ளைகளைப் பெறுதலும்"

பின்பு, தக்கன் மகிழ்ச்சியுடன் தன்பிதாவை நினைக்க, அதனைப் பிரமன் அறிந்து நமது புத்திரன் பரமேஸ்வரனிடத்தில் மேலான காரியங்களைக் குறித்து வரத்தைக்கோருமல், ஆணவமலத்துக் கேதுவான செல்வத்தைப் பெற்றுன். ஐயோ! இனியென் செய்யலாமென்று

குமாரன் பெற்றவரத்திற் கஞ்சி, விருப்படைந்து நிற்கின்ற தக்கனெதிரில் துரிதமாயெழுந்தருளி ஆசிர்வதித்தனன். அதனை அவன் அங்கீகரியாது, பிதாமகனை நோக்கி நாம் இருக்கயோக்கியமான நகரமொன்றை விதிப்பாயென்றவுடன், பிரமன், தன் நகருக்குமேலான சிறப்புகளோடுக் கூடிய தக்கமாபுரியென்னும் பேருடன் ஓர்நகரத்தினை நிருமித்துத் தன் குமாரனுக்கு அறிக்கையிடத், தக்கன் அதிற் பிரவேசித்துச் சகல தேவர்களும் தன்னைப் புடைசூழ்ந்து போற்றிவர, விளக்கம்பெற்ற சிங்காதனத்தில் வீற்றிருந்து, திரிபுவன சக்கிரேஸ்வரனாக அரசு செய்திருந்தான். சிலநாளைக்குப் பின்பு, கற்பிலும் வனப்பிலும் உயர்ந்த பிரமன் பாதத்தில் உதித்த வேதவல்லியென்னுங் கன்னிகையைத் தக்கன் மணந்து, சேடன் சிரோரத்தினங்களை வெளியிட்டதைப் போன்ற ஆயிரம் பிள்ளைகளைப் பெற்றனன். அப்பிள்ளைகளைத் தக்கன் நோக்கி, நீங்கள் பரமசிவனைக் குறித்துத்தவம் செய்து படைக்கும் பேற்றையடைந்து வரக்கடவீர்களெனப் பணித்தனன். அவர்களனைவரும் மானதத்தீர்த்தக் கரையைச் சேர்ந்து தவஞ்செய்யத் தொடங்குவதானார்கள். இதனை நாரதன் அறிந்து அவர்களுக்கு முன்தோன்றி, அஞ்ஞானத்துக்குக் காரணமாகிய படைப்பின் தொழிலில் அவர்கள் மனம்வைக்கக்கூடாதென்றும் எப்போதும்சாஸ்வதமாகிய முத்தியைப்பெறப் பரமனைநோக்கித் தவம் செய்யற்பாலதென்றும் அவர்களுக்கு அத்தவத்திற் குரியவைகளையும் மந்திரபூர்வமாகப் போதித்து அவர்களை ஆசிர்வதித்து அந்தரகமனமாகச் சென்றனன். பின் அவர்கள் நாரதன் குறித்தவாறே அரியதவங்களைச் செய்து பரமசிவ கடாக்ஷத்தினால் நித்தியபதவியைப் பெற்றார்கள். இப்பால், தக்கன் தன் பிள்ளைகள் செய்தி தெரியாமல் வருந்திப் பின் ஞானவுணர்ச்சியினால் நாரதன் செய்கையைத் தெரிந்து வாடினவனாய் மீட்டும் ஆயிரம் பிள்ளைகளைப் படைத்துத் தவஞ்செய்ய அனுப்பினன். அவர்களிடத்திலும் நாரதன் தோன்றிப் பேரின்ப வியலை அவர்கள் மனதிற்படும்படிக்கு நன்கெடுத்துணர்த்த, அக்குமாரர்களும் ஏகமனதாய்ச் சித்தத்தைச் சிவத்தின் பாதகமலங்களில் நிறுத்தி அவனருளாற்சாயுச்சிய பதவியையடைந்தனர். இக்காரியங்களைத்தக்கன் உணர்ந்து கோபித்துஇவ்வாறு மோசஞ்செய்த நாரதன் ஓரிடத்தில் நிலையின்றிக்கலகங்களையுண்டாக்கி வருந்தியலையக் கடவதெனச்சபித்து இனிப்பெண்களை

ப்பெற்றுச் சிருஷ்டிமல் கச்செய்வது தகுதியென்றெண்ணி இருபத்தாறு குமாரத்திகளைப் படைத்துப் பிருகுமரீசி புலத்தியன் ஆங்கிரசு புலகன் வசிஷ்டன் அத்திரி முதலான தவத்தருக்களித்து அவர்களால் சிருஷ்டி விருத்தித்து வருங்காலத்தில் தக்கன் மீளவும் இருபத்தேழு பெண்களைப் பெற்று அவர்களனைவோரையும் சந்திரனுக்கு வதுவை செய்து கொடுத்து மருகனை நோக்கி உன்தேவியரனைவரையும் அபேதமாகத்தழுவிக்களித்திருப்பா யெனச் சொல்லியனுப்பினன்.

"தக்கன் சந்திரனைச் சபித்தல்."

சந்திரனும் அவ்வாறே சிலகாலம் அப்பெண்மணிகளைச் சுகித்து வந்து அப்பால் அதிரூபவதிகளான கார்த்திகை ரோகணியென்பவர்களிடத்தில் மட்டும் அதிகமையல் கொண்டு மற்றவர்களை நினையாமலும் பாராமலுந்திரிய, மற்றப்பெண்கள் மனம் பொறுமற் கோபித்துத் தம்பிதாவினிடம் வந்து துகித்து முறையிட்டுக் கொண்டார்கள். அச்சொற்களைக் கேட்ட தக்கனுக்கு அதிகக்கோபமுண்டாகிச் சந்திரனைத்தினம் ஒருகலையாகக்குறைந்துமங்கிப்பலரும் இகழவருந்தக்கடவனென்று சபித்தவுடன், அக்கொடுமை மேலிட்டுச் சந்திரனது கலைகள் தினமொன்றாகப் பதினைந்து வரையில் தேய்ந்து ஒருகலைமாத்திரம் இருக்கச் சந்திரன் வருந்திவாடித் திகைத்து வெட்கித் தேவராஜனிடத்துக்கோடி, ஓ! சினேகிதனே! தக்கன் சாபசம்பந்தத்தினல் என் கலைகளனைத்தும் மாறி, ஒன்று மாத்திரம்நிற்கின்றது. அதுவும் இத்தினம் நீங்கும். அப்பால் நானிருந்தும் என்னபிரயோசன மென்று முறையிட்டுக் கொள்ளத் தேவேந்திரன்சோமனை விசனித்து நோக்கி நண்பனே! முன் திருக்கயிலாயத்திற்கு நாமிருவரும் சென்றிருந்தபோது, பயற்றுண்டை வாழைக்கனி மாங்கனி பலாக்கனி கரும்பு முதலியவற்றை விநாயகமூர்த்திதிருத்தியாகப் புசித்து வயிறுபருத்து ஊர்த்த சுவாசம் விட்டிருப்பதை நீகண்டு நகைத்தாய். அதைக்குறித்து அக்கடவுள் சீறி உன்னையாவரும் பாராமலிருந்து நிந்திக்கும்படி சண்டாளத்துவமடையக் கடவதெனச் சபித்தார். உனக்குற்ற அந்தத் துன்பத்தினைப் பிரமனுதியர் கயிலாசபதியினிடம் தெரிவித்துப் பிரார்த்தித்துக் கொள்ளப் பரமசிவன் உனக்கு அந்தச் சாபம் வருடம்

.. றை மட்டும் வரும்படிக்கு அனுக்கிரஹித்திருந்தார். அவ்வா றே ஆண்டுகள் தோறும் ஆவணிமாதம் பூர்வபட்சத் தமாவாசை சென்ற நான்காந்திதியில் உலகத்தார் உன்னைத் தெரிசித்த சண்டாளத்துவத்தைப் போக்கிக்கொள்ள விக்கினகர்த்தனைப் பூசித்து வருகின்றனர். அப்பழியுடன் மேலும் நீ இப்போது தக்கனல் ஒருகுறையைப் பெற்று உனது பெயரும் பிரகாசமும் மேம்பாடும் அடங்கினுய். ஆதலால், துரிதமாக நீ பிரமனிடம் இதனைப் போய்த் தெரிவித்துக்கொள்வா யெனக் கட்டளையிட்டனன். அவ்வாறே சசியானவன், மனோவதிக்குப் போய்த் தேவர் தபோதனர் சூழ்ந்து போற்ற ஆயிரம் இதழ் விரிந்த பொற்றாமரைப் பீடத்தெழுந்தருளிய பிதாமகனைச்சேவித்துத் தன் மாமனல் தனக்கு நேர்ந்த இன்னலை விண்ணப்பஞ்செய்து இரந்து நின்றனன். பிரமன் ஆலோசித்துச் சந்திரனை நோக்கித், தக்கனானவன் தன்னையே பரத்துவமாக நினைந்து வீறுப்படைந்திருக்கின்றான், எனக்கடங்கி வார்த்தையாடவு மாட்டான். ஆகையால், நீ பரமேஸ்வரனைச் சரணடைந்து உன்மனக்கவலையை முறையிட்டுக்கொள்வதே உனக்கு க்ஷேமகால மெனக் கட்டளையிட்டனன். கறுத்து உருமாறிய சந்திரன் தாமதியாமற் கயிலையைச் சேர்ந்து நந்திதேவரருள் பெற்று ஆலயத்துட் சென்று பரமனைக்கண்டு விழிகளில் ஆனந்தவாரி பெருகச்சேவித்துப் போற்றிய போது, பரமேஸ்வரன், சந்திரனை நோக்கி, நீ மிகவும் வருந்தி வருங்காரணமென்ன வெனத்திருவாய் மலர்ந்தனர். சந்திரன், பரமசிவத்தை வணங்கிச்சுவாமீ! கடினசித்தனுகிய தக்கனிட்ட சாபத்தால் இக்கதியானேன். தீனதயாபரனே! கிருபையுற்று இந்த ஒருகலை நிற்கவும், மற்றயவைகளுஞ்சேர்ந்து விருத்திக்கவும் கடாக்ஷிக்கவேண்டும், தேவரீரேயல்லது வேறுகதிகாணேன் என்று பிரார்த்திக்கும் சந்திரனிடத்திற் சிவபிரானுக்குக்கிருபை உண்டாகிப் பயங்கொள்ளவேண்டா மெனத் தேற்றி, அந்த ஒருகலையினையுந் தமது திருமுடியினில் தரிப்பதாயினர். உடனே தக்கன் சாபம் சந்திரனை நெருங்கப் பயந்தோடியது. அக்காலையிற் பரமேஸ்வரன், ஓ! சந்திரனே! நீ நமது சிரத்தின்கண் வதியப்பெற்ற மகிமையினுல் அழிவுறமாட்டாய், இனி மற்றைய கலைகளும் மாறிய வாறே தின மொன்றுகப் பட்சங்கள் தோறும் தேய்ந்தும் நிறைவெய்தியும் வருமென்றருளச் சந்திரன் தன் மனக்குறை நீங்கிக் கர்த்தனை வணங்கி விடைபெற்றுப் போய் முன்போலத்தன் செய்கை

யினை நடத்தியிருந்தனன். பின்பு இக்காரணங்களைத் தக்கன் அறிந்து கோபித்து நானிட்ட சாபத்தைச் சிவனோதடுக்க வல்லன்! பஞ்சகிருத்தியங்களை நடத்தியிருப்பவனென்று கருவித்தானோ! அல்லது நான் அவனிடத்திற் செல்வத்தைப் பெற்று அவனைத் தொழவில்லை யென்று இக்கருமத்தை முடித்தானோ! என்று பல நிந்தைகள் பேசுவதைத் தபோநிதியாகிய புலகர் கேட்டு மனம் பொறாமல் ஓ! தக்கனே நீ ஒப்புவமையற்ற பரமேஸ்வரனை இகழாதே! சிவனையிகழ்ந்தோர் ஒருபோதும் ஈடேறவறியார்கள்! இதுவேதவாக்கியமாம்! ஆகையால், அக்கடவுளைப் பக்தியாக வழி படக்கடவாய். தம்மைச் சரணடைந்தவரை ஆதரித்தல் அப்பெருமானுடைய வியற்கை யாதலாற் சந்திரன் சாபத்தைப் பக்குவமாய் விலக்கி, உன்வார்த்தையும் பொய்க்காமல் அவனுக்குக் கலைதேயவும் வளரவும் கிருபைசெய்தனர். உன்மருமகனாகிய சந்திரனுக்கு இவ்வாறு சேர்ந்ததற்கு நீ ஸந்தோஷப்பட வேண்டாமோ? இனிப் பரமசிவமும் உனக்கு மருமகனாக விருக்கின்றார். இதனைத் தீர்க்கமாக யோசித்து நடந்து கொள்வையாயின் உன் கீர்த்தி நிலைபெற்றிருக்கு மெனப் பலவாகக் கர்த்தன் பெருமைகளைப் யெடுத்துக் காட்டத் தககன் கோபந்தணிந்து தேவேந்திரனாதியர் போற்ற அரசு செய்திருந்தனன்.

"உமை தக்கன் மகளாய் வருதல்"

திருக்கயிலாயத்திற் சோதிமயமாகிய பரமேஸ்வரன் கொலுவிருக்குஞ்சமயத்திற் பார்வதி தேவியானவள் பக்கத்தில் நின்றெழுந்து ஆதிதேவனைத் தொழுது கர்த்தனே! உமது நிச்சய ஞானத்தைப் போதிக்க வேணுமென்று வினவப் பரமன் திருவாய்மலருவதாயினர். உருவம் குணம் செய்கை யின்றி எங்கும் நிறைந்த சிவமானது நால்வகைத்தோற்றதாலான எழுவகைப்பிறப்பின் ஜீவபேதத்தினது விடயங்களை மாயை அறிவைக்கொண்டு ஊட்டுவிப்பதாகவும், சொரூபஞான மறைப்பைத் தமது சத்திமூலம் கருணைசெய்து தெளிவிப்பதாகவும், இவைகளுக்குக் காரணமாய் அருவுருவத்தைத் தாங்கியிருப்பதாகவும், வேதாகமமூலமாக அதிகாரிகள் பிரயோசனத்தையடைய அருளிச் சதாசிவவுருவாய்த் தத்துவங்களைக் கடந்து நிற்பதாகவும், தமதருளாற் பிரணவமுதிக்கத் திரிமூர்த்தி சொரூபங்களாய் முத்தொழில் நடாத்

தும் அரியசெயல்களனைத்தையும் பரமேஸ்வரன் தெளிவாக உமைக்கு அருளிச்செய்தனர். அதைக்கேட்ட சுந்தரியானவள் களித்தவளாய்த் தேவரீர் அருள் எனது உருவென்பதை உண்மையாகக் கண்டனன். ஆகையால் யாவும் என்னிடத்தில் தோன்றின வென்று மகிழ்ந்த போது, கர்த்தன், பெண்ணே! உன்புகழை நமது சந்நிதானத்திற் பெருமையாக வியந்து கூறினை! இப்போது நாம் உயிர்கள் தோறும் உலவி அவைகள் தெளிவு பெறச் செய்வதினின்றும் நீங்கியிருந்து உனது உயிரும் உணர்ச்சி பெறுதலைக் காட்டுவோமெனக் கர்த்தன் தமது அருள்திறத்தினை நடத்தாதிருந்தனர். அப்போது அளவற்ற வுயிர்த்தொகை யனைத்துஞ் சடமாய் ஓவியம்போல் உணர்வற்று மாய்ந்து போயின. இதனைப்பார்ப்பதியார் கண்டு நடுங்கிப் பரமனைச் சேவித்து அடியாளுடைய பிழையினைப் பொறுத்தாள வேண்டுமென வேண்டினள். கர்த்தன் மனமிரங்கித் தமது அருளைப்பெற்ற உருத்திரகோடிகளுக்கு உணர்வுண்டாக்க, அவர்கள் படைப்புமல்குவதாகத் திருவிடைமருதூரிற் பரமசிவத்தை விதிப்படிக்கு வழிபட, அவர்கள் கோரிக்கைப்படிக்குச் சகல பிரபஞ்சங்களும் ஈசுரன் அருளால் முன்போல் நிலைபெற்று விளங்குவதாயின.

அத்தறுவாயில், உருத்திரகணங்கள் கர்த்தனைச் சேவித்து அடியோங்கள் பூசித்தவாறே இரவில் தினந்தோறும் யாராயினும் அருச்சிப்பாராயின் மாசிமாதப் பூர்வபட்சத்துச் சதுர்தசியில் விளங்கும் சிவராத்திரிப் புண்ணியகாலப் பலனைத்தந்தருள வேண்டுமெனத் துதிக்கப் பரமன் அவ்வாறே அவர்களுக்குக் கடாக்ஷித்துக் கயிலைக்கெழுந்தருளினர். பிரமனாதி தேவர்கள் கயிலையங்கிரியிற் சேர்ந்து பரமனைத் தொழுது தேவரீர் அனுக்கிரஹமில்லாது அறிவழிந்து நெடுங்காலம் சடமாய்ப் பவத்தில் ஆழ்ந்தோம். அதற்கு நிவாரணங் கட்டளையிட வேண்டுமென வேண்டச் சிவபிரான் அந்தப் பாதகம் உமையவளைச் சேரும் எனக்கட்டளையிட, விண்டுவாதியர் மகிழ்ந்து தங்கள் பதவிகளிற் சேர்ந்திருந்தனர். அக்காலையிற் பராசத்தியார், சிவபிரானைத் தொழுது சிவராசிகளுக்கடுத்த வினைகள்என்னைச் சேருங்காரணத்தை அருளவேண்டுமெனப் பிரார்த்திக்க, பரமன், நீஉன்னைப் புகழ்ந்தயேதுவினால் யாம் விகற்பித்து உயிர்களிடத்து உலவாது நீங்கினம். அவை உணர்வற்றுப் பின் நமது அனுக்கிரஹத்தா லெழுந்தன. ஆத

லால்,அப்பாதகம் உன்னை அணுகியது. மேலும் உன்னையல்லது அத்தனை பிராணிகள் அதனைத்தாங்க வறியுமோவென்று, ஆதியில் தக்கனுக்கு அளித்தவர பாலனத்தை நிறைவேற்றக் கருதிச் சொல்லியதைக்கேட்டுப் பார்ப்பதியார் நடுங்கி அறிவில்லாதவள் பிழையினை மன்னித்து அப்பாதகம் நீங்குமாறு போதிக்கவேண்டுமெனப் போற்றக் கர்த்தன் இரக்க முற்றருளுவார். நீகாளிந்திமடுவிற் பிரணவவடிவாகிய வலம் புரிச்சங்கின் உருவமாய்த் தவஞ்செய்யக்கடவை. சிலநாளில் தக்கன் அவ்விடம் வந்து உன்னையெடுக்கக் குழந்தையாகுவை. அவன் மகிழ்ந்து தன்தேவியிடம் உன்னை யெடுத்துக்கொடுக்க நீவளர்ந்து அஞ்சாவதாண்டு அடைந்து அறிவுதோன்றி நம்மைக்குறித்துத் தவஞ்செய்வை. அப்போது நாம் வந்து உன்னை மணஞ்செய்து இங்கெழுந்தருளுவோமென்றருள, உமைசம்மதித்துக் காளிந்திமடுக்கரையில் வலம் புரிவடிவாய்த் தவஞ்செய்திருந்தனள்.

யமுனைக்கு அடுத்திருக்கும் காளிந்திமடுவில் புரசனங்கள் அனைவரும் மாசி மகஸ்நானத்திற்குச் செல்வதைத் தக்கன் அறிந்து நல்வினைப்பலனுல் தானுந்தன் தேவியுடன் சென்று மடுவில் மூழ்கிவரும் போது, பராபரையானவள் தாமரைமலரிற் சங்கு உருப்பெற்றிருப்பதைக் கண்டுகளித்து அவ்வன்னையைத்தக்கன் கரத்திலேந்திப் பார்வதியாரே சிவபிரான் அனுக்கிரஹித்திருந்தபடி நமக்குப் புத்திரியானளெனத் தெளிந்து தன்தேவியினது கரங்களில் உலகமாதாவைக்கொடுக்க, அவள்தேகம் பூரித்து வாங்கித்தன் கொங்கைகளிற்சுரந்திழியும்பாலை அக்குழந்தைக்குஊட்டி மகிழ்ந்தாள். தக்கன் தனது தேவியுடன் தன் அரண்மனை சேர்ந்து முன்போல் அரசுசெலுத்தி யிருந்தான்.

"உமை தவம்புரிதல்"

வேதவல்லி யானவள், பராபரையைத்தன் பெண்ணகப் பாவித்துச் சகல சீருடன் போஷித்து வரும்போது, அம்மனுக்கு அஞ்சாவது ஆண்டுவந்துற்றது. அப்போது, லோகமாதா வானவள், தாய்தந்தையரை நோக்கி, நான் சிவனைச்சேரத் தவஞ்செய்யத் தக்கசாலையை நிருமித்துத் தரவேண்டுமென, அவர்கள் இந்த அற்புதவம்மையின் செயல்களை அறிந்தவர்களாய் அதற்கிணங்கித் தமதரண் மனைக்கு

அருகிலொரு கன்னிகாமாட மொன்றமைத்து அதிற் பார்ப்பதியா ரைத் தவஞ்செய்யும் படிக்கு அளவிறந்த பணிவிடைத்தோழிப்பெ ண்களுடன் கூட்டியனுப்பி விப்பதானர்கள். பார்பதியார் அதில் தங்கிப்பரமசிவனைக் குறித்துப் பன்னிரண்டு வயது வரைக்கும் தவ ஞ்செய்து வந்தனர். அப்பாற், பரமசிவன், தக்கமாபுரியில் இவள்தவ ஞ்செய்திருக்கும் இடத்திற்கு வந்து அவளுடைய அனுமதியின் பேரி ற்கன்னியா மாடத்திற்குட் சென்று பார்ப்பதியாரின் வழிபாடுகளைப் பெற்று அவளை ஆசிர்வதித்து நான் உன்னைத் திருமணஞ் செய்து கொள்ள வந்தேனென்றார். இதனைத்தேவியார் கேட்டவுடன் தமது இருசெவிகளிலும் கரங்களை வைத்து மூடிச்சிவநாமங்களை யுச்சரித்து லோகநாயகனைக் கடிமணஞ்செய்யக் கருதித்தவஞ் செய்யும் என்னை க்குறித்து நீர் இவ்வார்த்தை சொல்லலாகுமோ! சீக்கிரமாக இவ்வி டம் விட்டு அப்பாற்போம்! என்று சீறிச்சொன்னாள். கபடப்பிராம ணர் நகைத்துப் பரமசிவன் உன்னை மணஞ்செய்வது அரிது! அரிது! ஏன் வீணாகத்தவஞ்செய்து மெலிந்து போகின்றாய்? என்றதைக் கேட்டுத் தேவியார், கர்த்தன்காட்சி கொடாமற் போவாராயின் வலி திற் பிராணனை விட நிச்சயித்திருக்கின்றேன், இது சத்தியமாகும், நீர் பித்தனுதலாற் பாதக வாக்கியங்களைப் பேசுகின்றீர், புறம்பிற் போம்! போம்! என்று கோபித்துச் சொல்லி, விரைந்து சென்று பக்கத்தி லோரிடத்தி லிருந்தாள். பரமசிவன், அம்மனுடைய குணங் களுக்கு மகிழ்ந்து பராபரைக்கு மட்டும் தமது கோலத்தைக் காட்டிவ தாயினர். அச்சேவையைக் கண்ட பார்ப்பதியார், நடுநடுங்கி விழிக ளில் ஆனந்தவாரி பெருகப்பரமசிவன் பாதாரவிந்தங்களிற் சேவித்து, அடியாள் அறியாது செய்தகுற்றத்தைப் பொறுத்தாள வேண்டுமெ னப் பிரார்த்தித்தனள். பரமசிவன், தேவியைப் பயப்படவேண்டா மென்று ஆதரிக்க, அம்மை, பரமனை விழியிமையாது பார்த்து மனங்கு ழைந்துருகி நிற்பதனைத் தோழியர் பார்த்துப் பிராமணன் மாயா வாதி போற் காண்கிறதென்று தக்கனிடம் ஓடி அதைத்தெரிவிக்க அவன் பரமசிவன் எழுந்தருளினரென்று ஆனந்தக் கூத்தாடி என் புத்திரியை இனி லோகநாயகனுக்கு மணஞ்செய்து கொடுப்பேனென நிச்சயங்கொண்டான்

"திருமணம்"

அதன்பின்பு பரமசிவனுக்கும் தன் பெண்ணுக்குந் திருமணஞ் செய்ய அன்றையத்தினமே நாள்பொருத்த மாயிருக்கக் கண்டு தக்கன் சந்தோஷித்து மகோற்சவத்திற்குத் தேவரிஷிகளானவர் களைத் தூதுவர்மூலம் சீக்கிரந் தருவிப்பதானான். தனது பட்டணத்தையும் அரண்மனையையும் தேவலோகமும் நாணும்படிக்கு முன்னிலும் அதிகமாக அலங்கரிக்கக் கட்டளையிட்டுத் தன்புத்திரி தவஞ்செய்யுஞ் சாலையிற் பரமசிவனைப் போய்த் தெரிசித்துக் கரங்களைக் கூப்பித்தேவாதி தேவா! அடியேனுடைய புத்திரியைப் பாரியாகத் தத்தஞ்செய்துகொடுக்கப் பெற்றுப் போகவேண்டுமெனப் பிரார்த்தித்துக் கொண்டான். பரமசிவன், கிருபையாய் எழுந்தருளித் தக்கன் மாளிகையுட் பிரவேசித்துக் கல்யாணமண்டபத்திற் பிரமனாதியர் போற்றச் சிம்மாசனத்தி லெழுந்தருளி யிருந்தனர். அக்காலத்திற் பார்ப்பதியாரை அலங்கரித்துத் தேவகன்னியர்சூழ இலக்குமியும் சரஸ்வதியும் பரமேஸ்வரனிடப்பாகத்திற் சேர்த்தார்கள். சகலவாத்தியங்களும் மங்கல வாழ்த்துக்களும் ஓங்கப் பரமேஸ்வரன் திருக்கரத்திற் பார்ப்பதியாருடைய கரகமலங்களைத் தக்கன் சேர்த்துத் தேவாதிதேவனே! இக்கன்னிகையைத் தேவரீருக்குப் பாரியாகக்கொடுத்தேன். நீங்கள் செல்வமாக வாழ்ந்திருப்பீர்களென்று, தன்பத்தினி சலம்வார்க்கச் சகலதேவர்களுங் கொண்டாடக் கன்னிகா தானஞ்செய்தான். அச்சுபத்தினை யாவருந்தெரிசித்துக் கொண்டாடி யிருக்குஞ் சமயத்திற் காரணகர்த்தன் சடுதியில் மின்னலையொத்து மறைந்தனர். உமையவள், பக்கத்தில் தமது நாயகனைக்காணாமல் உற்சாகம் நீங்கி அக்கினியிற் பட்டதங்கம் போலத்தயங்கி யிருக்கும்போது யாவரும் அம்மையைத் தேற்றியிருந்தனர். அதனைத்தக்கன் கண்டு வடவையைப்போற் கோபித்து யாவருங் கலங்கத் தேவாதிதேவனை இழிவாகப்பேசி மகாவிஷ்ணு வாதியர்க்குச் செலவுகொடுத்தனுப்பிப் பரமசிவன் செய்த காரியத்தை யெண்ணியெண்ணி மனதில் வன்மத்துடன் அரசுசெலுத்தி யிருந்தான். இப்பாற் பராபரை முன் போலத் தவஞ்செய்திருப்ப தாயினள். அக்காலத்திற் சிவபிரான் ஒருசுபவேளையில் தவவேடம் பூண்டவராய் உமையவள் தவச்சாலைக்குவர, எமது இறைவி அவரைக்கண்டவுடன் நமது கர்த்தனுக்கு அன்பரென அவரை விசுவாசத்துடன் எதிர்செ

ன்று சேவித்து உபசரித்தனள், கர்த்தன் அவள் அன்பிற் கிரங்கிப் பராசத்தி நீங்கிய பாகராய் ரிஷபவாகனத்தில் தமது சுயரூபத்துடன் தோன்றி லோகநாயகியாரைத் தமது திருக்கரத்தை நீட்டி யெடுத்து விடையின் மீது தமது வாமபாகத்தில் இருத்திக்கணநாதர் சூழத் தமது திருக்கயிலைக்கு எழுந்தருளினர். இக்காரணத்தைக் கண்ட தோழியர் தக்கனிடந்தெரிவிக்க, அவன் ஆறிய அக்கினியினிடத்தில் நெய்யை ஊற்றியது போலக்கோபித்துப் பரமசிவனைப் பல பல தூஷணங்கள் பேசிச் சிவனை நினையாமலும் மதியாமலும் ஐஸ்வரிய கர்வத்திற் பட்டு இறுமாந்திருந்தனன்.

“தக்கன் கயிலை போய் மீளல்”

அதுசமயத்தில், விஷ்ணுவாதியர், தக்கன், பரமசிவத்தை மதியாமையினாலே சிவகடாக்ஷத்தாற் பெற்ற மகதயிஸ்வரியத்தை அனுபவியாமல் நாசமடைவானெனத் தீர்மானித்துப் பின்னுந் தாங்கள் தக்கனுக்குப் பயந்து பரமசிவனைப் போற்றுமவிருக்கச் சம்பவிக்குமென்றுஅதற்கொரு சூழ்ச்சியைத் தீர்மானித்துக் கொண்டு, தேவர்கள், தக்கன் முன்வந்து சேவித்து நிற்கின்ற காலத்தில் அவர்களிற் பிதாமகன் தன்குமாரனைப் பார்த்து ஏ! பிள்ளாய்!உன்புத்திரியையும் மருமகனாகிய பரமசிவனையும் நீ நினையாமலும் பாராமலும்இருக்கலாமோ? குற்றம்பார்க்கிற் சுற்றமேது? கோபமுள்ள விடத்திற்குணமும் உண்டாயிருக்குமென்பதனை நீயோசித்து வயிரத்தை விட்டுக்கயிலாசபதியை வழிபடுவாயாகில் மேலான கீர்த்தியைப் பெறுவாயென்றனன். தக்கன் அதற்குடன்பட்டுப் பரிசனங்கள் சூழ இரதாரூடனாய்த் திருக்கயிலையைச் சேர்ந்து ஆலயத்திற் பிரவேசிக்க முயன்ற சமயத்தில் அவ்விடத்திற் காவல்கொண்டிருந்த பூதகணங்கள், நீசிவத்துரோகி! உள்ளேசெல்ல லாகாது! அதற்காக இங்கேகாத்திரு! இல்லாவிட்டால் திரும்பிப் போகலாமென்றதின் பேரில் தக்கன் வெட்கிக் கோபத்துடன் திரும்பித் தன் பதிக்குவந்து தேவர்களை வருவித்து, ஓ! தேவர்களே! என்னைமதியாத பித்தனையும் அவன் பாகத்தமர்ந்த வளையும் இத்தினமுதல் நீங்கள் துதிக்கவும்சேவிக்கவும் வேண்டுவதில்லை. இக்கட்டளையை மறுப்பீராயின் உடனே உங்கள் பிராணனை வாங்கிப் போடுவேனென்று கோபித்துச் சொல்லத் தேவர்கள் தக்கனைவணங்கி

உமது உத்தரவுக்குப் பிசகுண்டோ! அவ்வாறே செய்யக்கடவே என்று விடை பெற்றுத் தங்கள் பதவிகளிற் போய்ச்சேர்ந்தார்கள்.

"பிரமன்யாகஞ் செய்தல்"

இவ்வாறு அளவற்ற காலஞ்சென்றபிற்பாடு பிரமதேவன் இஷ்டசித்திகளைத் தரவல்ல யாகமொன்று செய்வதாகக் கருத்துக்கொண்டு கயிலாசபதியினிடஞ்சென்று சுவாமீ! அடியேன் ஒருயாகத்தை நடாத்த நினைந்தேன். தேவரீர் எழுந்தருளி அதைப்பாது காத்து ரெக்ஷிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்துக்கொண்டான். பசுபதியானவர், நமது உருவாகிய நந்திவருவானென்று அனுக்கிரஹித்தனர். பிதாமகன் கயிலையை நீங்கித் தக்கமாபுரிக்கு வந்துதன்பிள்ளையைக் கண்டு நான்எத்தனப்பட்டிருக்கும் வேள்விக்கு நீ உன்பந்து வர்க்கங்களுடன் வந்து நடப்பிக்க வேண்டுமென்று சொல்ல, தக்கனும் அதற்கிணங்கி யிருந்தனன். பிரமன் மனோவதியைச்சேர்ந்து க்ஷேத்திரயாகத்தைத் தொடங்கினன். இச்சமாசாரத்தை விஷ்ணுவாதியர் தெரிந்து தக்கனுடனும் யாகத்துக்கு வந்துசேர்ந்தனர். பிரமன் அவர்களுக்கு உபசரணை செய்துஅவர்களை ஆசனங்களில் வீற்றிருக்கச் செய்து யாகச்சடங்குகளைத் தொடங்கினன். அப்போது யாகத்தின் அவிப்பாகத்தைப் பெற்றுவரும்படிக்குப் பரமேஸ்வரனால்அனுப்பப்பட்ட நந்திதேவர் அளவற்ற கணங்கள் சூழ வெழுந்தருளுவதாயினர். அதனைக்கண்ட பிரமன் திக்கென்றெழுந்து நந்திதேவரையெதிர்கொண்டு சேவித்தழைத்து வந்து ஒருதிவ்ய பீடத்திலிருக்கச் செய்தனர். தக்கன்விழிகளிற் கனற்பொறி சிதறப்பார்த்துச் சுடலையிற் கூத்தாடுஞ்சிவனுக்கு அடிமைகளான நந்தியையும் மற்றக்கணங்களையும் இங்கு வரும்படிக்குச் சொன்னவர்கள் யார்! என்றுபலமொழிகள் பேசித் தன் போதவுணர்வினால் உள்ளதை யுணர்ந்து பிரமனைச்சீறி நீ இதனைச்செய்தது தகுமோ! பிதாவானதாற் பிழைத்தாய்! அல்லது உன் தலையை வெட்டியிருப்பேன்! எலும்பு சிரம் சர்ப்பம் இவைகளையணிந்து சுடலைச்சாம்பலைப் பூசிச்சுடுகாடே யிடமாகத்திரியும் பித்தன், வேதவிதிப்படிக்குப் பவித்திரமாக நடத்தும் யாகத்தில் அவிபெறத்தகுமோ! இனி நாராயணனையே பரமாகக்கொண்டு அவருக்கு அக்கிர பூசைசெய்து முதல் அவிப்பாகத்தைக் கொடுத்து மற்றவர்களுக்கும் வரன்முறையாக நடத்தக்

...வாயென்று சொல்லியதனை நந்திதேவர் கேட்டுக் கண்களில் ...க்கினிப் பொறிபறக்கத் தக்கனைப்பார்த்து உமாபரமேஸ்வரரை ...ந்த உன்வாயைத் துளைத்து நாவையரிந்து விடுவேன்! ஆனால் ...த்தன் அனுமதி யில்லாததினால் மன்னித்தேன்! இனி இகழ்வை ...யாயின் உன்சிரத்தை வெட்டித் தள்ளுவேன்! எனச்சொல்லிப்பின் பரமேஸ்வரனை நீக்கியாகஞ்செய்கின்றவன் சிரம் அறக்கடவது! உனதுசெல்வப் பெருக்கனைத்துஞ் சிலதினத்தில் அழிந்து போகக்கடவது! வசைபேசிய உன்தலை அற்று ஆட்டுத்தலை பெறக்கடவாய்! உதாசனிப்பதை மாறாமல் விரும்பிக்கேட்ட இத்தேவர்கள் ஒருதரம் இறந்தும் பிறந்தும் பின்பு அளவற்றகாலம் சூரனென்னும் அசுரனால் வாதைப்பட்டு அழுந்தக்கடவர்! எனக் கொடிய சாபமிட்டுத் தம் கணங்கள் சூழக் கயிலைக்குப் போய் இச்சம்பவங்களைக் கர்த்தனுக்கு விண்ணப்பித்திருந்தனர். நந்திதேவர் போனபின் விஷ்ணுவாதிதேவர்கள் விபரீதம் விளைந்ததென்று வருந்தினார்கள். பிரமன், தான்தொடுத்த யாகத்தை முடிக்கவும் அஞ்சி நிறுத்திவிட்டான். இவைகளைக் கண்ட தக்கன் உள்ளேபயம் வருந்த வெளிக்கு ஸந்தோஷித்தவனாயெழுந்து தன் நகரத்தையடைந்தான், மற்றத்தேவர்கள் மனவாட்டத்துடன் தங்கள் தங்கள் பதங்களிற் சேர்ந்திருந்தார்கள்.

"ததீசி முனிவர் தக்கனுக்குப் புத்தி கூறல்"

மேற்கூறிய பிரமயாகம் சிதைந்தநாள் முதல் யாவரும் வேள்வி தொடங்கப் பயந்திருந்தார்கள். அக்காலத்தில் தக்கன் நான் வேள்வி செய்கிறேனென்று மயனைக்கொண்டு சகலவளங்களுடன் பெரிய யாகசாலை நிருமிக்கச்செய்து அதற்காகப் பரமசிவனைத் தவிரமற்றச் சகலரையும் தூதுவர் மூலந்தருவித்து வெகு சம் பிரமத்துடன் வேள்விதொடங்குவதாயினன். தேவராதியர் யாவரும் இந்தமகத்தில் என்னவிளையுமோ வென்று பயந்து வருந்தியிருந்தார்கள். தக்கன் தூதுவரை நோக்கி நீங்கள் இந்தவேள்வி விஷயத்தை அறிக்கையிடப்போனவிடங்களில் யாவராயினுந் தடைசொன்னதுண்டோ என்று வினவினன். சாரணர்கள், சுவாமீ! அகஸ்தியன் சனகன் அத்திரி வசிஷ்டன் பிருகு ததீசி துருவாசன் பராசன் இவர்கள் உமதுயாகத்தை